உ
சிவமயம்.

சங்கம்
23308 சா இ 103
406

காளமேகப்புலவர் சரித்திரம்.

த.ப
1485
841.5
காள 66
54PR.

இதிலே
அவர்பாடியதனிப்பாடல்களும்
ஆசுகவிகளும்
அவற்றிற்கு உரையும் அடங்கியிருக்கின்றன.

1902.
யாழ்ப்பாணம்,
நாவலர் அச்சுக்கூடம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7-57 ஆம் ஒழுங்கை,

முகவுரை.

406

தமிழ்ப்பாஷைக்கு வயசும் தமிழ்நாட்டிலே பண்டைக்காலந்தொட்டு விளங்கிய புலவர்களுக்குத் தொகையுங் கூறல் எளிதன்று. அப் புலவர்களுள்ளே காளமேகப்புலவரது ஆற்றலும் சாதுரியமும் யாவர்க்கும் அதிசயம் விளைக்காமற்போகா. பாடுஞ் சக்தியோ மிகப்பெரிது. அதிலும், அவர், சாமானிய ஜனங்களும் எளிதிலே விளங்கிக்கொள்ளத்தக்க அத்துணைச் செம்பாகமாக இயற் சொல்லாற் செந்தமிழ்க் கவிபொழிதலிலே தமக்கிணையில்லாதவர். அதிலும் பொருட் பொலிவும் அதிசய நகையும் விளைக்கப் பாடுவதில் ஒப்புயர்வில்லாதவர். அதிலும் சிந்திக்காமல் ஆசுகவி பாடுவதில் தமக்கிணை தாமேயானவர். அவர் பாடுவதில் மிக்க விரைவுடையவர் என்பது,

> "இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்—
> அம்மென்று லாயிரந்தா னாகாவோ"

என வருவதனாற் பெறப்படும். அவர் சாலிவாகனசகம் ஆயிரத்திருநூற்றில் விளங்கியவர். நானூறு வருஷங்களுக்குமுன்னர் விளங்கியவரெனக் கூறுவாருஞ் சிலருளர்.

அவர் சரித்திரத்தையும் அவ்வப்போது பாடிய பாடல்களையும் உரையோடு தனிநூலாக்குமிடத்துப் பலர்க்கு முபகாரமென்பது கருதியே இந்நூலை அச்சிட்டாம். இதிலுள்ளன பெரும்பாலும் விநோதரசமஞ்சரியிற் காணப்படுவனேவே யாயினும், உரையிலே பலதிருத்தங்கள் ஆங்காங்குஞ் செய்து புதிதாகவுஞ் சில சரித்திரக் குறிப்புக்களுஞ் சேர்க்கப்பட்டன.

உ

கணபதிதுணை

காளமேகப்புலவர் சரித்திரம்.

திருக்குடந்தையிற் பிறந்துவளர்ந்த வடமனுகிய பிராமண
ஞெருவன், ஸ்ரீரங்கத்திற் பெருமாள்கோயிற் சுயம்பாகியாகிப் பரி
சாரகம் செய்து கொண்டிருக்கையில், திருவானைக்காவிலுள்ள சம்
புகேசுவரர் கோயிற் ருசி ஒருத்தி மோகனங்கி யென்னும் பெயரு
டையவள், அதிக அழகும் ஆடல் பாடல்களிலே திறமையுமுடைய
ளா யிருந்ததனுல், அவன் அவளுடைய மோகவலையிற் சிக்கித், த
னக்கவள் இணங்கும்பொருட்டுப் பெருமாள் பிரசாதமுதலான
வைகளை அவளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து அவளோடு
சம்பந்தப்பட்டிருந்தான். அப்படியிருக்குமளவில் மார்கழிமாசத்
திற் சம்புகேசுவரர் சந்நிதியில், மோகனங்கிக்குத் திருவெம்பா
வைபாடும் முறைவந்தபொழுது,, "உன்கையிற்பிள்ளை" என்னும் பா
டலைப் பாடுகையில் அதில் "எங்கொங்கை நின்னன்பரல்லார்தோள்
சேரற்க" என்ற தொடரை அவள் வாயினுற்சொல்லித் தலைகு
னிந்துகொண்டதைப்பார்த்து அவளுடனே கூடவிருந்த மற்றைத்
தாசிகளெல்லாம் புன்சிரிப்புக்கொண்டு தங்களுக்குள்ளே இவள்சிவ
ன்கோயிற் ருசியாயிருந்தும் பெருமாள்கோயிற் சுயம்பாகியுட
னே சம்பந்தப்படுகிருளே! இஃதென்ன! 'படிக்கிறதுதிருவாசகம் இ
டிக்கிறது சிவன்கோயில்" என்பதாக வாயினுற் பேசுகிறதொன்று
நடக்கிறதொன்ரு யிருக்கிறதேயென்று அவளைப் பரிகாசம்பண்
ணினுர்கள். அது அவளுக்கு மார்பிலேதைத்து முதுகில்உருவினது

போல வருத்தத்தை விளைத்ததனால், அன்றிரவு அவ்வைஷ்ணவன் வரும் தருணத்திலே தெருக்கதவைச் சாத்தி உள்ளே வரவேண்டாமென்று தடுக்க, அவன்வாயிலுக்கு வெளியே நின்றபடி என்ன நிமித்தத்தால் இன்றைக்கு என்னைத் தடைசெய்கிறாயென, மோகனாங்கி நீ விஷ்ணு அடியான் நான்சிவனடியாளாகையால் உன்சம்பந்தம் எனக்குத்தகாதென, அவன் "அந்தாமரையன்னமே நின்னையானகன்றாற்றுவனே" என்றபடி உன்னை நான் ஒரு பொழுதாயினும் விட்டுப் பிரிந்துசகிப்பேனா? சகிக்கமாட்டேனாதலால் உன் தலைவாயிலிலேயே நான்றுகொண்டு என்பிராணனை விட்டுவிடுகிறேனென்றான். இவள் இஃதேது பழிவந்து சம்பவிக்கிறதேயென்று நினைத்து நல்லது நான் வேண்டுமென்பது உனக்கு ஆவசியகமாயிருந்தால் நீ தீட்சைபண்ணிக்கொண்டு சைவனானால் உன்னிஷ்டப்படி நடக்கிறேனென்று சொல்ல' அவன் காமப்பேய்கொண்டவனாகையால் "பெண்கள்பால் வைத்தநேயம் பிழைப்பரோ சிறியோர்பெற்றால்" என்றவிதமாய் அவளுறவைக் கைவிடமாட்டாமல், நீ சொன்னவண்ணம் சைவசமயத்தை அனுசரிக்கிறேனென்று ஸ்ரீரங்கத்தைவிட்டுச் சம்புகேசுரத்திற்கு வந்து சிவதீட்சைபண்ணிக்கொண்டு அகிலாண்டவல்லி கோயில் பரிசாரசனாகி, தனக்கு அவ்விடத்தில் வரும்படிகளில் அவளுக்குக்கொடுத்து மீந்ததைத் தன் சீவனத்திற்கு வைத்து அனுபவித்துக்கொண்டு வந்தான்.

அந்நாளிற் சம்புகேசுரத்தில் ஒரு சிவப்பிராமணன் தனக்கு வித்தையிற் பூரணபாண்டித்தியம் உண்டாகவேண்டுமென்ற நியமத்துடனே திரிபுரைசக்கரம் ஸ்தாபித்து அதில் அத்தேவதைக்குரிய மந்திரபீஜாட்சரத்தைப் பிரணவநமக சகிதமாக வரைந்து உருச்செபித்து நெடுநாளாக உபாசித்துக்கொண்டிருந்தான். ஓரிராத்திரி நடுச்சாமத்தில் அகிலாண்டநாயகி அழகான ஒரு சிறுபெண்போல வடிவெடுத்து வெள்ளைவஸ்திரம் உடுத்து வாய்நிறையத் தாம்பூலம் தரித்துக்கொண்டு உபாசகன் கண்ணுக்கெதிரே சென்று 'உன்வாயைத் திற'வென்று அந்தத் தாம்பூலத்தை அவன்வாயிலே உமிழப்போமளவில், அவன் நிர்ப்பாக்கியனாகையால் அவளை மகாதேவியென்றறியாமல் ஆரடி! எச்சிற்றம்பலத்தை என்வாயிலே துப்பவருகிறாய் உனக்குப்பயித்தியம் பிடித்ததோ! அப்புறம் எட்ட நில்லடி! யென்று கடிந்துரைத்தான். அம்மட்டில் அவனைவிட்டுத் திரும்பிவருகையில், மோகனாங்கி அன்றிராத்திரி கோயிற்குடவரிசைக்கு வந்திருந்ததறிந்து பரிசாரகன் அவளுடனே நீவீட்டுக்குப் போம்பொழுது என்னைவந்து அழை நாமிருவரும் கூடிப்போவோமென்று அங்கொருமண்டபத்திற் படுத்திருக்க, மோகனாங்கி குடவரிசைமுடிந்தபின்பு பரிசாரகனைத் தேடிக்காணாமல், தான்மாத்திரம் வீட்டுக்குப்போய் விட்டாள். ஸ்தானிகர்முதலானவர்களும் கோயிற்றிருக்காப்பிட்டுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடஞ்சேர்ந்தார்கள். பரிசாரகன் விழித்துப் பார்த்து மோகனாங்கியைக் காணாமையாலும், கோயிற்கதவு பூட்டப்பட்டிருந்ததனாலே தான் வெளிப்படக்கூடாமையாலும், இருந்த ஸ்தானத்திற்றானே நித்திரையின்றி எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அவனை மேற்சொல்லிய தேவிபார்த்து வாயைத்திறக்கச் சொல்லித் தன்வாயிலிருந்த பாக்குத்தம்பலத்தை உமிழ்ந்து, இதைத்தின்றுவிடென்ன, அவன் மோகனாங்கியென்று நினைத்து அவளிஷ்டப்படி நடவாமற்போனால் அவளுக்குக் கோபம்மூளும், பிறகுதன்முகத்தைப் பார்க்கமாட்டாளென்பதனாலும், தான் பூர்வஜன்மத்திற் செய்தபுண்ணியத்தாலும் மறுத்துப்பேசாமல் உட்கொண்டான். அம்மை அவனுக்கு அன்றுமுதற் காளமேகமானது அளவின்றி மழைபொழிவதுபோலத் தமிழில் ஆசுமுதலாகச் சொல்லப்படும் நால்வகைக்கவிகளும் அசுவதாட்டியாய்ப் பாடும்சத்தி உண்டாகவும், அந்நால்வகைக்கவிகளிலும், யாராயினும் ஒருவர் எந்தச்சொல்லாவது, பொருளாவது அடியாவது, தொடையாவது எடுத்துக் கொடுத்து, இன்ன அலங்காரத்தில் இப்படித் தொடங்கி இப்படி முடிக்கவேண்டுமென்றமாத்திரத்தில் மயங்கி இடர்ப்படாமல் அப்படியேவிரைந்து பாடுகின்ற ஆசுகவித்திறம் விசேஷமாகச் சிறக்கவும், அக்காரணத்தால் காளமேககவியென்னும்பெயர் லோகப்பிரசித்தமாகவாய்க்கவும் அனுக்கிரகித்து மறைந்துபோனாள்.

அவள் போனவுடனேதானே அவனுக்குக் கடல்மடைதிறந்தாற்போலக் கவிபாடத்தக்க பிரபலமான வாக்குண்டாயிற்று. அதனால் அவன் இப்பொழுது நமக்குப் பிரசன்னமானவள் அகிலாண்டநாயகிதானென்று உணர்ந்து மகாதேவியை ஸ்துத்தியம்மண்ணி முதல் முதல் திருவானைக்கா உலாவென ஒரு பிரபந்தம் பாடிய பின்பு, அச்சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு முதலானபலநாடுகளுக்கும் போய் அங்குள்ள பிரதானமாகிய தெய்வஸ்தலங்களைத் தரிசித்து அவ்வம் மூர்த்திகள்மேல் ஸ்துதியாகவும், நிந்தாஸ்துதியாகவும் மற்றும் அனேகவிதமாகவும் பற்பலபாடல்கள்பாடி வரும்பொழுது, சுதை, மரம், லோகமுதலானவைகள் சிற்பனால் உருப்படுத்தப்பட்டபின் அவ்வற்றிற்குரிய இயற்பெயர் மாறிவெவ்வேறு சிறப்புப்பெயர் உண்டானாற்போல் அகிலாண்டேசுவரி வரப்பிரசாதத்தால் முன்புள்ளபரிசாரகனென்னும் பெயர்மாறி, யாவரும் காளமேகப்புலவரென்று சொல்லும்படி மேன்மையாகிய பெயர் எத்திசையிலும்

வழங்கத் தலைப்பட்டது. அக்காலத்தில் அவர் தரிசித்த ஸ்தலங்களிற் பாடியபாடல்களிற் சிலவருமாறு.

அவர் செங்காட்டில் உத்தராபதீசரைத் தரிசித்து, எப்பொழுதும் ஒழுக்கத்துடனே நாட்டகத்தே வாழ்ந்திருக்கும் நாதனாரே, நீரிப்பொழுது இந்தச் செங்காட்டில்வந்து ஒளித்துக்கொண்டிருந்தால் முன்பு யமனையும், மன்மதனையும், சிறுத்தொண்டர் பிள்ளையையும் கொலைசெய்த பழியானது உம்மைவிட்டு நீங்கிப் போய்விடுமோ வென்னுங்கருத்தை அமைத்து,

“காலனையுங் காமனையுங் காட்டுசிறுத்தொண்டர்தரும்
பாலனையுங் கொன்ற பழிபோமோ—சீலமுடன்
நாட்டிலே வாழ்திருக்கு நாதரே நீர்திருச்சங்
காட்டிலே வந்திருந்தக்கால்”

என்னும்வெண்பாவைநிந்தாஸ்துதியாகப்பாடினார்.

அவர்வைகாசிமாதத்திற் காஞ்சீபுரத்தில் வரதராஜர்கருடோற்சவங்கண்டு சேவிக்குமளவில், சுவர்ணகசிதமாகிய கருடனுடைய தேஜஸையும், அந்தவாகனத்தின்மேல் எழுந்தருளும் பெருமாளது திவ்விய மங்கள விக்கிரகலக்ஷணத்தையும் அவ்வுற்சவ வைபவத்தையும் வியந்து நிந்தாஸ்துதியாகப் பாடிய வெண்பா:

“பெருமாளுநல்ல பெருமாளவர்தம்
திருநாளுநல்ல திருநாள்—பெருமாள்
இருந்திடத்திற் சும்மாவிராமையினாலேயோ
பருந்தெடுத்துப் போகிறதேபார்.”

என்பதும், மற்றும் அப்பெருமாள் குதிரையின்மேலெழுந்தருளும் பரிவேட்டையுற்சவம் சேவிக்கும்பொழுது, பரமாத்மா சீவாத்மாக்களுக்குள்ள நவவித சம்பந்தங்களில் ஒன்றாகிய பர்த்துருபாரியா சம்பந்தத்தை உலகத்தாருக்கு வெளியிடவேண்டுமென்று கருதிப் புலவர்பெருமானானவர், தம்மையொரு பெண்ணாகப்பாவித்து, அப்பெண் சான்றோர்வணங்குகின்ற தேவர்களுக்கெல்லாம் முதன்மையாகிய தேவனும், அத்திகிரியென்னும் ஊரினையுடையவனுமாகிய வரதப்பெருமான், புரவிமேலேறித் திருவீதியிலெழுந்தருளிவரக்கண்டு மால்கொண்டு, தனக்கு அரையிலுடுத்த கலைசோர்ந்து,காலின்கண் விழுந்ததென்று இரங்குவதாகப் பொருளமைத்துப்பாடிய

“எட்டொருமா வெண்காணி மீதேயிருந்தகலை
பட்டொருமா நான்மாவிற் பாய்ந்ததே—சிட்டர்தொழுந்
தேவாதிதேவன் றிருவொற்றி யூருடையான்
மாவேறி வீதிவரக் கண்டு.”

என்பதும்,

ஏகாம்பரநாதரைத் தரிசிக்கையில் அங்குள்ள சிவப்பிராமணர்கள் அவரை அலட்சியமாக எண்ணி இவன் கவிபாடும் திறத்தை அறிவோமென்று, இந்த ஸ்தலத்தில் ஆறு அற்புதங்களிருக்கின்றன அவைகளை ஒரு வெண்பாவிற் பொருத்தி முடித்துத் தரவேண்டுமென, அவர் அவையெவையென, அவர்கள் குமரகோட்டக்கீரை, செவிலிமேட்டுப்பாகற்காய், பருத்திக்குளநீர், செப்புவாசற்காற்று, கம்பத்தடியிற்றவம், கருமாறிப் பாய்ச்சல் என்னும் இவைகளேயென்று சொல்ல, அவர்முதலிலே அப்பாவென்பதும் ஈற்றிலே யார்க்குமினிதென்பதும் சேர்த்து, நீங்கள்இப்பொழுதுசொன்னபடியேசொல்லுமிடத்து வெண்பாவாகுமென, அவர்கள் அப்படியே சொல்லிப்பார்த்து அதிசயித்த,

அப்பா குமரகோட்டக் கீரை செவிலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குளநீர்—செப்புவா
சற்காற்றுக் கம்பத் தடியிற் றவங்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்குமினிது”

என்பதும், பின்னும் அவர்கள் முக்கால், அரை, கால், அரைக்கால் இருமா, மாகாணி, ஒருமா, கீழரை என்னும் இவ்வெட்டிலக்கமும் வரும்படி இந்த ஏகாம்பரநாதர்மேல் ஒரு வெண்பாப்பாட வேண்டுமென்ன,அப்படியே அத்தொகைகள் வரத்தக்கதாக அவர் என்வாக்கே, தடியூன்றிப் பிரிங்ரிஷிபோல் மூன்றுகாலால் நடவாமுன்னும்,மயிர்நரையாமுன்னும்யமனைக் கண்டுஉயிர்நடுங்காமுன்னும்விக்கலெழ இருமாமுன்னும், பெரிய மசான பூமிக்குப்போகாமுன்னும் கச்சிப்பதியில் ஒரு மாமரத்தின்கீழ் எழுந்தருளியிருக்கின்றவரை இளமைப்பருவமுள்ள இப்பொழுதே ஸ்துதிசெய்யென்னுங் கருத்தமைத்துப் பாடிய,

“முக்காலுக்கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன்கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது”

என்பதும்.

தில்லையிற் பரமசிவனுடைய பிட்சாடன உற்சவம் தரிசிக்கையில், அவ்வுற்சவத்தில் முழக்குங்காளமுதலிய வாத்தியவோசையைக் கேட்டுச் சுவாமிக்கு முன்னே அலங்கரித்துச் செலுத்திவரும் யானைமுதலியவைகளையும், சுவாமி முடிமேற் கவிக்கின்ற குடையும்

பிடிக்கின்ற கொடியும் அசைக்கின்ற சாமரமுமாகிய ராஜாங்கத்திற்குரிய மற்றச் சின்னங்களையும் பார்த்து, விஷசர்ப்பத்தை ஆபரணமாகப் பூண்ட தில்லைநாயகரே, தேவரீர் பிச்சையெடுத்துண்ணப் புறப்பட்டும், உமக்கு இந்த ஆடம்பரமெல்லாம் ஏன்? பிச்சைக்காரனுக்கேது கொட்டுமுழக்கென்ற பழமொழியும் கேட்டதில்லையோவென்னுங் கருத்தை அமைத்துப்பாடிய,

“நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவரீர்
பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாங்
காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போலே முழங்கும்
மேளமேன் ராசாங்கமேன்”

என்பதும், தென்புலியூரில் வசிக்கின்ற ஐயனே? நீ இப்படி ஏழையாயிருந்தால், ஏழையைக்கண்டால் மோழையும் பாயும் என்றபழமொழிப்படி, உன் இளக்காரத்தைக்கண்டு பெண்டாட்டியானவள் வலாற்காரமாய்த் தாண்டித் தலைமேலேறாளா? ஒருவன் செருப்பாற் புடைக்கானா ஒருவன் வாயிலேவந்தபடி ஏசானா? ஒருவன் வில்முறிய மண்டைமேல்மாட்டானா? (தலைமேலேறினவள்-கங்கை, செருப்பாற்புடைத்தவர்-கண்ணப்பநாயனார், ஏசினவர் சுந்தரமூர்த்தி, வில்முறியமாட்டினவன்- அருச்சுனன்) என்னுங் கருத்தை அமைத்துப்பாடிய,

“தாண்டி யொருத்தி தலையின்மே லேறாளோ
பூண்டசெருப் பாலொருவன் போடானோ—மீண்டொருவன்
வையானோ வில்முறிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ யேழையானால்”

என்பதும், பின்னும் மேகமண்டலத்தைப் அளாவிய சோலைசூழ்ந்த திருப்புலியூரில் எழுந்தருளியிருக்கின்ற அம்பலவாணரே கல்லாலெறிந்த சாக்கியநாயனாரும், வில்லால் மண்டைபிளக்கச்சாடிய விஜயனும், செருப்பாற் கனக்கப்புடைத்த கண்ணப்ப நாயனாரும், முதுகில்தழும்பெழப் பிரம்பாலடித்த பாண்டியனுமாகிய இவர்களெல்லாரும் நல்லவர்களென்று திருவுளமிரங்கி இவர்களுக்குக் கிருபை பாலித்ததும், உம்மை நிந்தையென்றும் சொல்லாமல் புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சித்தமன்மதனைக் கொலைசெய்ததும் என்ன நிமித்தத்தாலெனச்சொல்லவேண்டுமென்னும்கருத்தை அடக்கிப்பாடிய,

“செல்லாரும் பொழில்சூழும் புலியூரம்பலவாணதேவனாரே, கல்லாலும் வில்லாலுஞ் செருப்பாலும் பிரம்பாலுங் கடிந்துசாடும், எல்லாரு நல்லவரென் றிரங்கியருளீந்ததென்னவிகழ்ச்சியென்றுஞ், சொல்லாமன் மலரைக்கொண்டெறிந்தவனைக் கொன்றதென்ன சொல்லுவீரே.” என்பதும்

நடேசரைத்தரிசிக்கையில், திருவோடு கையிலேந்துகின்ற அம்பலவாணரானவர் தில்லைக்கோவிந்தனென்னும் ஆபர்தலைவனிருக்க, மற்றும் பலஆபர்கள் இரவும்பகலும் மாறாமற்காத்திருக்கத் தில்லைவனத்திற் புகுந்து ஆட்டைக்களவெடுத்தது என்னவுபாயமெனவும், தில்லைக் கோவிந்த ராஜப்பெருமாள் சயனத் திருக்கோலங்கொண்டிருக்கவும், மற்றும் பலதேவர்கள் இரவும் பகலும் அகலாதுநடனதரிசனத்திற்குக் காத்திருக்கவும் திருச்சிற்றம்பலவாணரானவர் தில்லையம்பலத்திற் பிரவேசித்து நடனஞ்செய்வதற்குத் திருவடியைத் தூக்கியது என்ன உபாயமோவெனவும் சிலேடையாகப்பொருளமைத்துப் பாடிய,

“கொங்குலவுந் தென்றில்லைக் கோவிந்தக் கோனிருக்கக்
கங்குல்பக லண்டர்பலர் காத்திருக்கச்—செங்கையிலே
ஓடெடுத்த வம்பலவ ரோங்குதில்லை யுட்புகுந்தே
ஆடெடுத்த தென்னவுபாயம்.”

என்பதும்.

தில்லைமூவாயிரவரிற் சிலர் நடேசர் கையிலேந்திய மானானது அவர் திருமுகத்திற்கு நேராகத் தன்முகத்தையும், முன்னங்கால்களையும் மேலேதூக்கி நிற்பதற்குக் காரணம் கற்பித்து ஒரு வெண்பாப் பாடவேண்டுமென்ன, அவர் அன்னப்பறவைகள் வயல்களிற் சஞ்சரித்துத் தாமரை மலர்களிற் றங்குகின்ற தில்லைப்பதியில் எழுந்தருளிய நடேசரது கைக்கமலத்திலிருக்கும் மான்கன்றானது அவ்விறைவனது பொன்போலும் சிவந்தநிறத்தையுடைய அழகிய ஜடாமகுடத்தில் அணிந்த அறுகம்புல்லைமேய்ந்து, அங்குள்ள கங்காஜலத்தைக் குடிக்கும்படி தன்மனத்தில் இச்சையானது அதிகரிக்க அங்ஙனம் தாவிப்பாய்கின்றதென்னும் கருத்தையமைத்துப்பாடிய,

“பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்னெஞ் சுவகையுறத் தாவுமே—அன்னங்கள்
செங்கமலத் துற்றுலவுந் தில்லை நடராஜன
கைக்கமலத் துற்றமான் கன்று,”

என்பதும், மற்றுமவர்கள் அத்தலத்திலுள்ள ஞானசபை கனகசபை, நிர்த்தசபை, ஆனந்தக்கூபம் திருமூலட்டானம் பேரம்பலம், பஞ்சாவரணம், நாற்கோபுரம், பொற்கம்பம், மண்டபம் சிவகங்கை

இவைகளை ஒருவெண்பாவாக அமைக்கவேண்டுமென்ன, புலவர் சிரோமணியானவர் நான்வேறே அமைக்கவும் வேண்டுமா, இப்போது சொன்னவைகளைச் சொன்னமுறைப்படி நீங்களே சீர்தளை வகுத்து இசைத்துப் பார்த்தால்வெண்பாவாகுமென்ன, அவர்கள் அவர்சொற்படி செய்து அவ்வாறே அமைந்திருக்கக்கண்ட,

"ஞான சபைக னகசபை நிர்த்தசபை
ஆனந்த கூபந் திருமூலட்—டானம்பே
ரம்பலப் பஞ்சா வரணநாற் கோபுரம்பொற்
கம்பமண்ட பஞ்சிவகங் கை,"

என்பதும், சிவகாமவல்லியைத் தரிசித்தபொழுது, மாட்டுக்கோன் தங்கையானவள் வடமதுரையைவிட்டுத் தில்லைவனத்திற்கு வந்து ஆட்டுக்கோ னொருவனுக்குப் பெண்டாகி வாழ்க்கைப்பட்டு வெளிப்பட்டோடுகின்ற குட்டிகளைப் பட்டிக்குள் மறித்துக்கொண்டுவந்து விடுவதற்கு ஒரு பிள்ளையும் பெற்றுச் சிற்றிடைச்சியாய்விட்டாள். என்செவியே, நீ இந்தச் செய்தியைக் கேள்விப்படவில்லையோ என் கண்ணே! நீயாயினும் இதைப் பார்ப்பாயாக. (மாட்டுக்கோன்-கண்ணபிரான்-ஆட்டுக்கோன்-நடேசன் - குட்டிமறித்தல் விநாயகனை வணங்கும் அடியார்கள் தத்தம் தலையிலே முன்புநேராகக்குட்டிப்பின்புகையைமறித்துக்குட்டிக்கொள்வது.கட்டுமணிச்சிற்றிடைச்சி-மணிமேகலைகட்டிய சிறியமருங்குலுடையாள்) என்னும் கருத்தை யமைத்துப்பாடிய.

"மாட்டுக்கோன் றங்கை மதுரைவிட்டுத் தில்லைவனத்
தாட்டுக்கோனுக்குப்பெண்டாயினாள்—கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானை யும்பெற்றாள்
கட்டுமணிச் சிற்றிடைச்சி காண்."

என்பதும்திருக்கழுக்குன்றத்தில் வேதகிரீசரைத் தரிசிக்குமளவில் பெருமைதங்கிய திருக்கழுக்குன்றத்தில் வசிக்கும் சிவனாரே! நீர் ஆதிதொடங்கி வெகுகாலமாக அவமான அல்லற்பிழைப்பே பிழைத்துவிட்டீர்-பகைவராகிய முப்புரத்தாரை நேரிலே கண்டவிடத்தில் வில்லைக் கையிற்பிடித்து அம்பினால் எய்து வீழ்த்தமாட்டாமல் உம்முடைய வீரம் கூத்தாடி சிலம்புபோல வியர்த்தமாம்படி பல்லையிளித்துக்கொண்டீரே இவ்வளவுதானா உமது படைத்திறமென்னும் பொருளை அமைத்துப்பாடிய,

"சொல்லிற்பெரிய கழுக்குன்றரேதொல்லை நாண்முதலா
அல்லற்பிழைப்பே பிழைத்துவிட்டீர்முப் புரத்தவரை

வில்லைப்பிடித்தெய்ய மாட்டாம னீரந்தவேளையிலே
பல்லைத்திறந்துவிட்டீ ரிதுகாணும் படைத்திறமே.,,

என்பதும்,

ஸ்ரீமுஷ்டமென்னும் திவ்வியக்ஷேத்திரத்திற் பூவராகசுவாமியைச்சேவிக்கும்பொழுது வயல்வாளைகள் எழும்பிவரம்பில் வளர்கின்றகமுகமரங்களில் மோதி, அவைகளிலுள்ள பூம்பாளைகள் தெருமுழுதும் சிதறும்படி தாவிப்பாய்கின்ற'வளப்பமுடைய திருமுட்டமென்ற ஊரிற் பன்றிக்கு மார்பில் கொம்புமுளைத்திருப்பதாக ஓரதிசயத்தை யான்கண்டேன்; (பன்றிக்கு மார்பிலே கொம்பு முளைத்திருப்பதென்பது - ஸ்ரீமகா விஷ்ணுவானவர் பூவராக மூர்த்தியாகிப் பூங்கொம்புபோன்ற பூமிப்பிராட்டியை வைத்திருப்பது) என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"தெருமுட்டப் பாளை சிதற வளர்பூகத்
தருமுட்டச் செய்வாளை தாவும்—திருமுட்டத்
தூரிலே கண்டே னொருபுதுமை பன்றிருக்கு
மாரிலே கொம்பான வாறு."

என்பதும், மற்றும் திருமுட்டமென்ற திருப்பதியிலெழுந்தருளிய பூவராகமூர்த்தியே, இடதுகரத்திற் பாஞ்சசன்னியத்தை ஏந்திய பெருமாளே, உனது தாமரைபோன்ற திருவடியை நாங்கள் மர்க்கடநியாயமாக ஆகிரயிக்கத் திறமையின்றி அனாதிதொட்டி துபரியந்தம் அஞ்ஞானத்தில் அமிழ்ந்து கிடந்தோம், ஆதலால் எமக்கு வரக்கடவதாகிய கிலேசமெல்லாம் உனது நிரேதுக் கிருபையினால் மார்ச்சால நியாயமாக ஒழித்தாளும்படிக்கு நீ எம்மெதிரே வருவாயாகவென்னும் பொருளை யடக்கிப்பாடிய,

"முட்டத்துப் பன்றி முளரித் திருப்பதத்தைக்
கிட்டத்துப் பன்றிக் கிடந்தோமே—தொட்ட
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெமக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா.,,

திருவாலங்குடியில் தட்சிணாமூர்த்தியைத் தரிசிக்கையில் வடவிருட்சத்தின் அடியில் வசிப்பவனை, அமிர்தமதனம் செய்தகாலத்திற்சுராசுரர்கள் அஞ்சியோடும்படி பாற்கடலிற்றோன்றிய ஆலாலமென்னும் விஷத்தை அவர்கள் உச்சீவிக்கும்பொருட்டு அமுதுசெய்தருளினவனை ஆர்தாம் விஷபானம் பண்ணமாட்டானென்று வாய்கூசாமற்சொல்லுவார், அந்தக் கொடுவிஷத்தை அவன் பானம்பண்

ணுமல் நமக் கென்னவென்று உபேட்சித்திருப்பானுகில் உலகத்தாரெல்லாம் ஒருமிக்க மண்ணின்மேல் மாண்டுபோக மாட்டார்களா, என்னும் கருத்தை யமைத்துப்பாடிய'

"ஆலங் குடியானை யாலால முண்டானை
ஆலங் குடியானென் றூர்சொல்வார்—ஆலங்
குடியானே யாயிற் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதி லே."

என்பதும்'

மாயூரத்திற் சுவாமி தரிசனம் செய்கையில், தம தன்பர்கள் விரும்பினவைகளையெல்லாம் வரையாது கொடுக்கும் உதாரகுணமுடையவரென்று சொல்லப்படும் மாயூரநாதருக்கு எத்தனைகாலம் கைகொண்டமட்டும் வாரிவாரி இறைத்தாலும் மாளாத இருப்பாக மலைபளவான வெள்ளியும், மலைபளவான பொன்னுமிருக்கவும், மேலும் தெளிந்த அறிவினையுடைய 'உமாதேவியானவள் எப்பொழுதும் பக்கத்தில்வந்து உமக்கொரு குறைவுமில்லை பயப்படவேண்டாம் பயப்படவேண்டாமென்று கையமைத்து அபயதானம் பண்ணிக்கொண்டிருக்கவும், அவர் ஏன் விஷத்தையுண்டார், நமக்கு எவ்வளவு பொருளிருந்தாலும் "நின்றுதின்றாற் குன்றுமாளு" மென்பதுபற்றியோ, அல்லது நமது சொத்தெல்லாம் நம்மட்டிலன்றி வல்லார் கொள்ளையாய்ப் போய்விடுகிறதே யென்பது பற்றியோ வென்று நினைப்போமென்றால் அப்படியெல்லாமல்ல, தம்மை நோக்கி முறையிட்ட தேவர்களை ரட்சிக்கும் பொருட்டே விஷபானம் பண்ணினரென்னும் கருத்தை அமைத்துப்பாடிய,

"வள்ள லெனும்பெரிய மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேயிருக்கத்—தெள்ளுமைபாள்
அஞ்சலஞ்ச லென்றுதின மண்டையிலே தானிருக்க
நஞ்சுதனை யேனருந்தி னார்"

என்பதும்,

வைத்தீசுரன் கோயிலிற் சுவாமி தரிசனம் செய்கையில் இந்தப் புள்ளிருக்கும் வேளூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே முன்னாளில் மன்மதனை எரித்த அக்கினி உன் கண்ணிலிருக்கின்றது. தாருகாவனத்து ரிஷிகள் உன்னைக்கொல்ல விடுத்த அக்கினி உன் கையிலிருக்கின்றது. உனக்கு அழலாடியென வழங்கும் காரணப்பெயருக் கேற்றபடி உன் திருமேனிமுழுதும் அக்கினி சூழ்ந்திருக்கின்றது. இவ்வாறு அக்கினிமயமா யிருக்கின்ற உன்னை இந்தத்

தையற்கலையுடுத்த பெண்ணானவள் அச்சமின்றிச் சேர்ந்து எப்படித் தன் கலையுடன் தானும் வேவாமலிருக்கின்றாள். இவளுக்கு அக்கினிஸ்தம்பனவித்தை ஏதாவது தெரிந்திருக்கிறதோ, அதனால் அவ்வக்கினியை உஷ்ணிக்க வொட்டாமல் அடக்கி வைத்திருக்கின்றாளோ, எனக்குத் தெரியச்சொல்வாயாக வென்னும் கருத்தை அமைத்துப்பாடிய,

"தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலே
தீத்தானு முன்புன் சிரிப்பிலே—தீத்தானுன்
மெய்யெல்லாம் புள்ளிருக்கும் வேளூரா வுன்னையிந்தத்
*தையலா ளெப்படிச் சேர்ந்தாள்"

என்பதும்,

திருவாரூரில் ஒரு விசேஷகாலத்திற் கோயிலுக்குப் போனபொழுது, அத்தருணத்திற் குருக்கள்மார் தியாகருக்கு வச்சிர பதக்கம் சமர்ப்பித்துச் சாத்துப்படி பண்ணிக் கொண்டிருந்ததனாற் சுவாமியைத் தரிசிப்பதற்குச் சற்றுத் தாமசப் பட்டதுகண்டு, அவர் அன்னப்பறவைகள் வசிக்கும் வயல்கள் சூழ்ந்த திருவாரூரில் வாழும் தியாகேசருக்கு முற்காலத்தில் ஒப்பற்ற சிறுத்தொண்டர் புத்திரனைக் கொன்றும், மனுநீதிகண்ட சோழனுடைய பிள்ளையைக் கொன்றும், பராக்கிரமமுடைய மன்மதனைக் கொன்றும் வைரமானது விட்டுப்போகாமல் இன்னமிருக்குமோ, என்றமாத்திரத்தில் அந்த வச்சிரமாலை படீரென்று அறுந்துவிழுந்தது. அஃதறிந்து அவர்கள் இவர் மகாத்மாவென்று உள்நடுங்கி வந்து உபசரிக்க, இரண்டு துண்டாய் அறுந்து விழுந்த அவ்வச்சிரமாலை மறுபடி ஒன்றாய்ப் பொருந்திப் பிறந்ததுபோலாகும்படி, முன்பு இன்னம் வயிரமிருக்குமோ வென்று பாடினதைப் பின்பு, இன்னம் வயிரமிருக்குமே யென்று திரும்பி யமைத்துப்பாடிய,

"அன்ன வயல்சூழ மாரூர்த் தியாகனார்க்
கின்னம்வயிர மிருக்குமோ (மிருக்குமே)—முன்னமொரு
தொண்டர்மகனைக் கொன்றுஞ் சோழர்மகனைக்கொன்றும்
சண்டமதனைக் கொன்றுந்தான்"

என்பதும்,

மற்றும், திருவாரூரிற் பிரமோச்சவ தரிசனம் செய்கையில் செம்மையாகிய கமலைப்பதியில் வாழ்கின்ற தியாகனாரே! உமதுமைத்துனரானவர் தமக்கு ஒரு மாடாயினுமில்லாதிருந்தும் காணுமல் கண்கட்டுவித்தையுமல்ல யதார்த்தமாகவே பூமிமுழுவதும் உழுது

* தையலாள்—தையல்நாயகி

பயிர்செய்து உண்டு சுகித்திருக்கின்றார் உமக்கு ஒரு வெள்ளைமாடிருந்தும் உழுது உண்ணத் திறமையில்லாமல் விஷத்தையுண்டீர். அன்றியும் நீர் பெற்றபிள்ளை இரண்டுக்கும், அப்பிள்ளைகளின் தாய்க்கும் ஜீவனார்த்தத்திற்கு இரண்டுபடி நெல்லுக்கு வழியில்லாமற் பிச்சையெடுத்தீர். உமது பண்டவள மிப்படியிருக்க, இப்பொழுதுமக்கு உற்சவக்கொண்டாட்டமும் உண்டாயிற்றே. (மைத்துனர்-திருமால், பூமிமுழுதும் உழுதது - அத்திருமால் வராகமூர்த்தியாகிப் பூமியை அடிவரையில் தோண்டியது. உண்டது-மகாப்பிரளயகாலத்தில் உலகமெல்லாம் எடுத்து விழுங்கியது. கமலைப்பதி-திருவாரூர்) என்னுங் கருத்தையமைத்துப்பாடிய,

“ஒருமாடுமில்லாமன் மைத்துனனார் புவிமுழுது முழுதேயுண்டார், நரைமாடொன் றுமக்கிருந்து முழுதுண்ணமாட்டாமல் நஞ்சையுண்டீர், இருநாழிநெல்லுக்கா விரண்டுபிள்ளைக் குந்தாய்க்குமிரந்தீரின்று, திருநாளுமாயிற்றே செங்கமலைப்பதிவாழுந் தியாகனாரே.

என்பது, பின்னும் வீதியில் தியாகராஜர் எழுந்தருளி நடனஞ்செய்யக்கண்டு தரிசிக்கையில் திருமேனி முழுதும் புஷ்பமணமும் புழுகுமணமும் வீசுகின்ற தியாகேசருக்குத் கையிலேபணமிருந்தால் அது அவரைச் சும்மாயிருக்கவொட்டுமா, பணமென்ன செய்யும் பத்துவகைசெய்யும்” என்றபடி அந்தப்பணக்கொழுப்பு மூலையிலிருந்தவரை முற்றத்திலிழுத்துவிட்டு ஆட்டிப்புடைத்தால் அவரென்ன செய்வார். நாணமின்றித் திருவாரூர் வீதியிலே பகிரங்கமாக வந்து நின்று தம்முடைய இஷ்டர்களெல்லாம்பார்த்து நகைக்கத் தலைவிரிகோலமாகக் குதித்துக் கூத்தாடமாட்டாரா? (பணம்-சர்ப்பகங்கணம்) என்னுங் கருத்தையமைத்துப் பாடிய,

“ஆடாரோ பின்னையவ ரன்பரெலாம் பார்த்திருக்க
நீடாரூர் வீதியிலே நின்றுதாம்—தோடாரும்
மெய்க்கே பரிமளங்கள் வீசுந் தியாகேசர்
கைக்கே பணமிருந்தக் கால்.”

என்பதும், மேலும் சுவாமி யுனக்கு உண்சிறசோறு வெல்லமாய் விட்டதனால் ஊரு முலகுமறியப் பிச்சைச்சோற்றுக்காக எங்கெங்கும் ஒடி உழன்று திரிந்தீர். உம்மைப்பற்றி விசாரித்துப் பார்க்குமிடத்தில், நீர் நிலையாயிருப்பதற்குச் சுவாதீனப்பட்டதாக ஒரூராயினுமில்லை. இப்பொழுதிருக்கின்ற ஊரும் ஒற்றியாயிருக்கின்றது. அன்றியும் உமது இயற்கையான ஊரும் பேரும் உருவமும் இப்படிப்

பட்டவைகளென்று யாவராலும் அறியப்படாதவைகளா யிருக்கின்றன. அங்ஙனமாயினும் தரித்திரப் பட்டிமகன் தனபால செட்டியென்று பெயர் பெற்றதுபோலத் தியாகராஜரென்று பெரிய பெயர் மாத்திரம் பெற்றுவிட்டீர். இனி நீர் ஆரூரிலிருப்பீர்! அங்குமிங்கும் சும்மா அலையாமல் பொது ஸ்தானத்திற் போய்விடும் (ஒற்றி-திருவொற்றியூர், ஆரூர்-திருவாரூர்) என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

“பாரூரறியப் பலிக்குழன்றீர் பற்றிப் பார்க்கினுமக்
கோரூருமில்லை யிருக்கவென்றா லுள்ள வூருமொற்றி
பேரூரறியத் தியாகரென்றே பெரும் பேருப்பெற்றீர்
ஆரூரிலேயிருப்பீ ரினிப்போய்விடு மம்பலத்தே.”

என்பதும்

திருவண்ணாமலையில் அருணாசலேசரைத் தரிசிக்கையில் கறிசமைத்த சட்டியிற்பாதியுறுப்பிருக்க, அச்சட்டியிலிட்டு அள்ளிய அகப்பையிற் பாதியுறுப்பிருக்க, எதிரேபோட்ட இலையிற் பரிமாறினபடி பாதியுறுப்பிருக்கப் பிராமணவேடங் கொண்டுவந்து நடித்த சோணேசரானவர் அந்நாளிற் சீராளாவென்று அழைத்தபொழுது, அப்பிள்ளை கலகலவென்று சிரித்தவண்ணமாக எழுந்தெதிரே ஓடிவந்தது என்ன அற்புதம்! என்மனமே நீ சொல்லென்னும் கருத்தையமைத்துப்பாடிய,

“சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டவிலை யிற்பாதி யிட்டிருக்கத்—திட்டமுடன்
ஆடிவந்த சோணேச ரன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தென்னோ வுரை”

என்பதும் மற்றும், உண்ணாமுலைநாயகிகோயில் ஸ்தானிகாரகிய சம்பந்தாண்டான் என்பவன் மயிர்வினைஞனிடத்தில் தன்தலைமழுங்க முண்டிதமாகச் சௌளம் பண்ணிக்கொள்ளும் சமயத்திற் காளமேகப் புலவரைக்கண்டு மரியாதையில்லாமல் வித்தியாகர்வத்தினால் இந்தஸ்தலத்தின் பெயரும், என்பெயரும் நான் செய்வித்துக்கொள்ளும் சௌள கருமமும் ஒரு வெண்பாவில்வரும்படி, மன்னென்றெடுத்து மனுக்கென்று முடிக்கவேண்டுமென்று சொன்னான். சொன்னமாத்திரத்தில், அவர் இவன் தன்னை ஒரு பொருளாக மதித்துப் பாடச்சொன்னமையால் இவனைப்பரிகசிப்பதே தகுதி யென்று நினைத்து அவன் சௌளம் பண்ணிக்கொள்வதற்கு நிமித்தமும் கற்பித்துப்பாடிய,

"மன்னு மருணகிரி வாழ்சம்பந் தாண்டாற்குப்
பன்னுதலைச் சௌளம் பண்ணுவதேன்—மின்னின்
இளைத்த விடைமாத ரிவன்குடுமிபற்றி
வளைத்திழுத்துக் குட்டாம லுக்கு"

என்பதும்

ஒருகாலத்தில் ஸ்ரீரங்கத்தாருக்கும் சம்புகேசுரத்தார்க்கும்
சமயத்துவேஷமுண்டாகிஇருதிறத்தாரும் கலகப்பட்டுக்கொண்டிருக்
கையில், அவர்களைச் சமாதானப்படுத்தும் பொருட்டுக் காளமேகப்
புலவர், சீரங்கத்தாரும் திருவானைக்காவாரும் எங்கள்மதம் உயர்ந்
தது உங்கள்மதம் தாழ்ந்தது, எங்கள் தெய்வம் பெரியது உங்கள்
தெய்வம் சிறியதென்று ஓயாமல், யானைசேனைகளைக்கொண்டு ஆயுத
ச்சண்டை செய்வார்போல, வியர்த்தமாய் வாக்குச்சண்டைசெய்வா
னேன் சைவம் ஸ்வஷ்ணவமாகிய இவ்விருசமயக்கொள்கையும் "ஏக
மேவாப்பரப்பிரமம்" அத்வைதம்போலன்றி, ஆத்மா பரமாத்மா இர
ண்டு முண்டென்றும், அவ்விரண்டும் ஒன்றற்கொன்று சமத்துவ
முடையன வல்லவென்றும், அவ்விரண்டனுள் பரமாத்துமா ஆண்
டானென்றும் சீவாத்மா அதற்கு அடிமையென்றும் சொல்லப்படும்
விசிஷ்டாத்வைதமாய்க் கரதலாமலகம் போலவிளங்கி நிற்கையால்
இஃதென்ன ஆச்சரியம் இந்தவிவரம் தெரியாதா? இதுபற்றி இனி
ஒருவர்க்கொருவர் ஓர வாரங்கள் பேசவேண்டா மென்னுங்கருத்
தையமைத்துப்பாடிய,

"சீரங்கத் தாருந் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதென்—ஓரங்கள்
வேண்டாவி தென்ன விவரந் தெரியாதா
ஆண்டானுந் தாதனு மானால்,"

(ஆண்டானுந் தாதனுமானா லென்பதை ஆண்டியுந் தாதனுமானாலெ
னச் சிலர் சொல்வர் அது பொருந்தாது

மதுரையிற் சுவாமி தரிசனம் செய்கையில், அங்குள்ள சிவப்
பிராமணர்கள் அவரைப்பார்த்துச் சோமசுந்தரக்கடவுள் சந்நிதிக்
கெதிரேகட்டிய கூட்டிலிருந்து கின்னரிவாசிக்கிறதுபோலக் கூவுகின்
ற கிளியைச் சுட்டிக்காட்டி "கின்னரிவாசிக்குங்கிளி' என்பது ஈற்
றடியாகவர, இந்தச் சொக்கநாதர் விஷயத்தில் ஒரு வெண்பாப்பா
ட வேண்டுமென்ன, புலவர் அக்காலத்தில் திருஞானசம்பந்தர், அ
ப்பர், சுந்தரமூர்த்தியென்னும் இம்மூவரும் பாடிய தேவாரப்பாடல்
களைத் திருவுள முவந்தருளினாரென்னும் 'பான்மையையுடைய பரம
சிவனை, நான்மாடக்கூடலில் அறுபத்து நான்கு திருவிளையாடலையு

ஞ் செய்தானென்றும், தனது பரமசாமர்த்தியத்தை விளக்கிக் கா
ட்டிய நரியாகிப் பரிக்கு மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானர
கதி, விடபகதியாகிய ஐவகை நடையினைக் கற்பித்தானென்றும் கி
ளியானது கின்னரிவாசியா நின்றதென்னும் கருத்தையமைத்துப்பா
டிய,

"ஆடல்புரிந் தானென்று மந்நாளிலே மூவர்
பாடலுவந் தானென்ற பான்மையான்—கூடலிலே
நன்னரி வாசிக்கு நடையயிற்றி னானென்றும்
கின்னரி வாசிக்குங் கிளி"

என்பதும், மற்றும் பெண்களே! நீங்களிவ்வதிசயத்தைப் பார்த்
தீர்களா, இந்த மதுரையிலெழுந்தருளிய கடம்பவன நாதரானவ
ர் எப்போதும்பெண்ணைத் தலைமேலே சுமந்து திரிகின்ற பைத்திய
ம் பிடிந்தவர் அன்றியும் எட்டுத் திக்கும் சிலாக்கியமாயிருக்கின்ற
தங்கைமேலே நெருப்பை வாரியிட்டார், அக்காளை மேலேறினார்.
ஆதலாற், பித்தற்குத் தங்குணம் நாலினும் செம்மையென்பது மெ
ய்ப்பட்டிருக்கின்றது. (பெண்ணைச் சுமந்தது-கங்கையைத் தாங்கின
து, தங்கைமேல் நெருப்பிட்டது - தமதுகையில் மழுவேந்தினது,
அக்காளையேறியது-அந்தஇடபத்தின்மே லேறினது) என்னும்கரு
த்தையமைத்துப்பாடிய,

"கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனார்
பெண்டீர் தமைச்சுமந்த பித்தனார்—எண்டிசைக்கும்
மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார்
அக்காளை யேறினா ராம்."

என்பதும், அங்கயற்கண்ணம்மையைத் தரிசிக்கும்பொழுது இந்த
உலகத்தில் நான் நல்ல புதுமையொன்று கண்டேன். அதைச் சொல்
லவா சொல்லவா, சொல்லவா சொன்னாற் பெண்பாவமாகிறதே, ஆ
ணுக் கறக்கேடு செய்தாலும் பெண்ணுக்குப் பிழை சொல்லலாகா
தே, ஆதலால் அடக்கவேண்டுமல்லவோஎப்படிச் சொல்லுகிறதென்
றால் "மலிந்தாற் கடைக்கு வரு" மென்பதனாலும், 'அள்ளாது குறை
யாது இல்லாது பிறவாது,' என்பதனாலும், அடக்குவதனாற் பயனில்
லை சொல்லத்தான் வேண்டும். அதென்ன வெனில் செல்வம் நிறை
ந்த மதுரைப்பதியிலுள்ள மீனாட்சியானவள் அரைக்காசுக்குப் போ
னமானம் ஆயிரங்கொடுத்தாலும் வாராதென்பதையு மெண்ணாமற் பே
தைமைக்குணத்தால் பாண்டியனிடத்திற் குதிரைவிற்க வந்தவனைச
சேர்ந்து விக்கினேசுரனென்ற யானைக்கன்றைப் பெற்றாளென்பது

தான், (குதிரை விற்கவந்தவன்-சொக்கநாதன்) என்னுங்கருத்தை யமைத்துப் பாடிய,

"நல்ல தொருபுதுமை நானிலத்தில் நான்கண்டேன்
சொல்லவா சொல்லவா சொல்லவா—செல்வ
மதுரைவிக்கி னேசுரனை மாதுமையாள் பெற்றுள்
குதிரைவிற்க வந்தவனைக் கொண்டு."

என்பதும்,

ஒருகாலத்தில் தமக்கு வியாதிகண்டு அது மணிமந்திர ஔஷதங்களால் நிவிர்த்தியாகாமையால் வைத்தீசுரன்கோயில் மண்ணை எடுத்து இது வினைதீர்த்தான் மருந்தென்று உட்கொண்டவுடனே,பரிகாரமாகுமென்பதை உணர்ந்து அத்தலத்திற்கு வந்து அவ்வாறு செய்து சொஸ்தமடைந்தபொழுது காளமேகப்புலவர், தொண்டர்களுக்குப் பகுத்திட்டு அவர்களுடன் தாமுமொருவராயிருந்து விருந்துண்டருளிய, புள்ளிருக்கும் வேளூரில் வசிக்கும் எமது நாதரானவர் உலகத்திற் பிரபல வைத்தியரா யேற்பட்டிருந்து எவர்களுக்கும் கண்ட வியாதிகளையெல்லாம் நாள்தோறும் தப்பாமல் தீர்த்து வருகின்றார். பார்த்தீர்களா! அதற்காக அவர் கொடுக்கும் மருந்தை ஆராய்ந்து பார்த்தால் அதென்னகட்டுச்சரக்கா, காட்டுச் சரக்கா, கடைச்சரக்கா அதுவொன்றுமல்ல. சுத்த மண்தான் ஆனாலும் அவருக்குக் கைவாசியுண்டுபோலக்காண்கிறது (தொண்டர்களுக்குப்பகுத்துண்டலாவது, ஐயாறதனிற் சைவனாகியுமென்றபடி, திருவையாற்றில் மகோற்சவத்தின் ஐந்தாம்நாள் சுவாமி தமது சந்நிதியில் நிவேதிக்கப்படும் திருப்பாவாடையமுதை மற்றச்சைவர்களுடன் தாமொரு சைவனாயிருந்து பகுத்துண்பது) என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"மண்டலத்தி னுளும் வயித்தியராய்த் தாமிருந்து
கண்டவினை தீர்க்கின்றார் கண்டீரோ—தொண்டர்
விருந்தைப்பாத் துண்டருளும் வேளூரெங் நாதர்
மருந்தைப் பார்த்தாற் சுத்தமண்."

என்பதும்,

திருநாகையென்னும் ஸ்தலத்திற் சிவதரிசனம் செய்யப் போனவிடத்தில், திறமானசங்கீதப்பயிற்சியும் சாரீர வளமுமில்லாத ஒரு தேவடியாள் தம்புருமீட்டிக் குரலெடுத்துப்பாடக் கேட்டபொழுது, அது கர்ணகடூரமாய்ச் சகிக்கக் கூடாமலிருந்ததினிமித்தம் தமக்கு வெறுப்புண்டாகி, யாவரும் வாழ்த்தாநின்ற நாகைப்பதியிலிருக்கும் அழகுள்ள தேவடியாளானவள் தன் பாழ்ங்குரலை யெடுத்துப் பாடினாள். பாடக்கேட்டவுடன் நேற்றுக் கழுதையைக்காணாமல் ஊரெங்குந் தேடியலைந்துகொண்டிருந்த வண்ணானவன் என்கழுதையைக் கண்டேன் கண்டேனென்று சந்தோஷத்தோடே கட்டியிழுத்துப் போம்படி வைக்கோற்பழுதையைக் கையிலெடுத்துக்கொண்டு சீக்கிரமாகஓடிவந்தான்பார். (நாகை-நாகபட்டணம்) என்னும் கருத்தை யமைத்துப்பாடிய,

"வாழ்த்து திருநாகை வாகானதேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான் கண்டேன் கண்டேனென்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்."

என்பதும்,

திருவிடை மருதூரென்ற ஸ்தலத்திற் சிவதரிசனம் செய்யுமளவில் குளிர்ச்சிதங்கிய தேன்பொருந்திய சோலைசூழ்ந்த மருதூரிலெழுந்தருளி யிருப்பவரே அந்தநாளிற் கண்ணப்ப நாயனார் தமது வாயில் வைத்துத்தின்று சுவைபார்த்தூட்டிய மாமிறைச்சி முதலிய கறியும், சிறுத்தொண்டநாயனார் அன்பினாற் பாகமாகச் சமைத்திட்ட பிள்ளைக்கறியும் உமக்குப் போதாதோ? உமது வயிறென்ன சாணை சமுத்திரமோ? நீர் பன்றிக்குட்டியையும் எதுக்கு நெருப்பிலிட்டுத்தீத்தீர்சொல்லுவீராக. (பன்றிக்குட்டியைத் தீத்தது வராகவுருவெடுத்த திருமாலின் மகனாகிய மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்தது) என்னுங் கருத்தை யமைத்துப் பாடிய,

"கண்ணனிடுங் கறியுங் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணு சிறுவன் கறியும் பற்றாதோ—தண்ணிய
மட்டியையுஞ் சோலை மருதீசரே பன்றிக்
குட்டியையேன் தீத்தீர் குறித்து."

என்பதும்,

திருத்துருத்தியென்னும் ஸ்தலத்திற் சுவாமியைத் தரிசிக்கையில் அவ்விடத்திலுள்ள குருக்கள்மார், எங்கள் பரமசிவனுடைய ஆபரணத்தை விசேஷித்து ஒரு வெண்பாப்பாடவேண்டுமென்ன, இவர் மலர்க்காவி னிடங்களிலும் வயலிடங்களிலும் முத்துக்களார்ந்த திருத்துருத்தியென்கின்ற பெரியநகரத்தில் வசிக்கும் பொய்மையில்லாத சத்தியஸ்ரூபராகிய சிவபிரானானவர், தமது திருமேனியில் அணியும் பூஷணமோ பிரசண்டமாருதத்தையும் பக்ஷணம்பண்ணும். பாற்கடலைக் கடையக் கயிறுமாகும். திருமாலுண்ட பூமியையும் தன்தலையிலேந்தி வாழாநிற்குமென்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"காலையிலும் வேலை கடையக் கயிறாகும்
மாலையிலும் பூமுடித்து வாழுமே—சோலையில்

செய்யிலா ரம்பையிலுஞ் செந்துருத்தி மாநகர்வாழ்
பொய்யிலா மெய்யரிடும்பூண்"

என்பதும், மற்றும் புங்கங்கொம்பங்கிங்கொன்பது - புளியங்கொம்பங்கிங்கொன்பது - வெட்டிநறுக்கிய வெள்வேலங்கொம் பங்கிங்கொன்பது என்னும் இவைகளை ஒருவெண்பாவில் அடக்கிப் பாடவேண்டுமென்ன, இவர், "எங்கள்மடத்துக் கெரிகரும்பு கொள்வது" என்பதை முதலில் எழுவாயாகச் சேர்த்து நீங்கள் சொன்னவாறே சொல்லிப்பாருங்கள் அது வெண்பாவாய் முடிந்திருக்கின்றதென்ன, அவர்கள் அந்தப்படி சொல்லிக் கண்ட,.

"எங்கண் மடத்துக் கெரிகரும்பு கொள்வதுபுங்
கங்கொம்பங் கிங்கொன் பதுபுளி—யங்கொம்பங்
கிங்கொன் பதுவெட்டிநறுக் கியவெள்வே
லங்கொம்பங் கிங்கொன்பது."

என்பதும்,

சதுர்த்தி புண்ணியகாலத்தில் விக்கினேசுரர் மூஷிகவாகனரூடராய் வீதியிலெழுந்தருளி .வரக்கண்டு தரிசிக்கையில், கர்ணமத முதலிய மும்மதங்களையுடைய வலிமைமிகுந்த பெரிய மலைபோலும் யானையை அற்பஜெந்துவாகிய ஒரு எலியானது இழுத்துக்கொண்டு போகின்றதே, ஐயோ இதைக்குறித்துக் கேள்விமுறை யில்லையோ! சிவனுடைய மழுவும் விஷ்ணுவினது சக்கரமும், பிரமனது தண்டமும் எங்கேபோயின அவைகளை ஆர்பறித்துக்கொண்டு போனார்களென்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"முப்பான் மழுவு முராரிதிருச் சக்கரமும்
பார்ப்பான் கதையும் பறித்தோரார்—வாய்ப்பார்
வலிமிகுத்த மும்மதத்து வாரணத்தை யையோ
எலியிழுதுப் போகின்றதே."

என்பதும்,

சஷ்டியிற் சுப்பிரமணியரானவர் தமது வலப்பக்கத்திற் சிவபெருமானும், அவர் பக்கத்தில் உமாதேவியும், இடதுபக்கத்தில் திருமாலும் அவர் பக்கத்தில் விநாயகமூர்த்தியும் வரிசையாய் வரும்படி மகாசம்பிரமத்துடனே வீதியில் எழுந்தருளக்கண்டு தரிசித்த பொழுது, தகப்பன் இரந்துண்டு சீவிப்பவன், தன்னைப் பெற்ற தாய் மலைநீலி தாயுடன்பிறந்த மாமன் உறியெட்டி வெண்ணெய்திருடி, சப்பைக்காலையுடைய அண்ணன் பெருவயிறன் இச்செய்தி பறைசாற்றியதுபோல லோகப்பிரசித்தமாயிருக்க, இந்த ஆறுமுகக் கடவுளுக்கு இவ்விடத்தில் இதென்ன பெருமை யென்னும் கருத்தை யமைத்துப் பாடிய,

"அப்ப னிரந்துண்ணி யாத்தான் மலைநீலி
ஒப்பரிய மாமனுறி திருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிற னாறுமுகத் தானுக்கிங்
கென்ன பெருமை யிது"

என்பதும்

ஒரு சிவஸ்தலத்திற் சுவாமி வீதிப்புறப்பாடாகி வரக்கண்டு தரிசிக்கும்பொழுது, அவ்விடத்திற் சிலர் இந்தப் புறப்பாட்டைக்குறித்து ஒன்பதுசாதிப்பெயர் வருமாறு ஒரு கலித்துறை பாடவேண்டுமென்ன, இவர் சரஸ்வதிநாயகன் வாழ்த்துதல்செய்ய, இடபம் சுமக்க, வைரவமூர்த்தியும் சுப்பிரமணியக்கடவுளும் இந்திராணிகணவனும் போற்றுதல்செய்ய, பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமால் யாவர்க்கு முன்னேசொல்ல, தித்திப்பாகிய வளைந்த கருப்புவில்லையுடைய காமதேவன் தாழ்ந்துவணங்க, பெருமைதங்கிய மான்தோலையுடுத்து, ஜடாமகுடதாரியாய் எங்கும் தட்டாத சிவபெருமான்வீதியிலேபுறப்பட்டெழுந்தருளியது அதிகவிநோதமாயிருக்கிறதென்னும் கருத்தை அமைத்து, அவர்கள் சொன்னவண்ணம் அவ்வொன்பது சாதிப்பெயரும் வரும்படி சிலேடையாகப்பாடிய,

"வாணியன் வாழ்த்திட வண்ணான் சுமக்க வடுகன்செட்டி
சேணியன்போற்றத் திரைப்பள்ளி முன்செல்லத் தீங்கரும்பின்,
கோணியன் றாழக் கருமான்றுகிலினைக் கொண்டுடுத்து,
வேணிய னாகியதட்டான் புறப்படல் வேடிக்கையே"

என்பதும், ஓரூரிற் சர்க்கார் உத்தியோகஸ்தனாகிய விகடராமையனென்னும் மாத்துவப்பிராமண னொருவன் அப்பொழுதேவிழுந்து சாகிறதாய் மிகவும் மெலிந்து திடுக்குத்திடுக்கென்று தென்னாலு ராமலிங்கன் வளர்த்தகுதிரைபோலிருக்கின்ற ஒரு நாட்டுத்தட்டைப் பிடித்து அதன்முதுகிற் சமுக்காளச் சேணம்வைத்து, 'வழியிலேகண்ட குதிரைக்கு வைக்கோற்புரி கடிவாள' மென்ற பழமொழிப்படி கயிற்றுக் கடிவாளம்போட்டு அக்கடிவாளத்தை இடதுகையிற்பிடித்து, வலதுகையிற் புளியம்வளார் கொண்டு அடித்து,இரண்டு கால்களினாலும் வயிற்றிலிடித்து நடத்த நடவாததுகண்டு, தன் அதிகாரத்தின் கீழிருக்கின்றவர்களைப் பார்த்து இதை நடத்திக்கொண்டுபோங்களென்று உத்தரவுசெய்ய, அவர்களிற்சிலர் முன்புறத்தில் வந்து கடிவாளத்தைத் தொட்டிழுக்க, சிலர் பின்புறத்திலிருந்து நெட்டித்

தள்ள அப்படியும் அது விசையாய் நடவாமல் மெள்ள மெள்ள அடிமேலடிவைத்து நடப்பதைக் காளமேகப்புலவர் பார்த்து, எப்போதும் வாயோயாமல் வேதாத்தியயனம் பண்ணுகின்ற விகடராமையனென்பவன் ஏறிச்செலுத்தும் குதிரையானது, கடிவாளத்தைத்தொட்டு முன்பக்கத்தில் மூன்றுபெயர் வலித்துக்கொண்டுபோக, பின்பக்கத்திலிருந்து இரண்டுபெயர் கையினால் நெட்டித்தள்ள அந்தமட்டில் ஒருமாதத்திற்குக் காதவழிக்குக் குறையாமல் விரைந்துபோகின்றதெனப் பரிகாசமாகப் பொருளமைத்துப்பாடிய,

"முன்னேகடிவாள மூன்றும்பேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போங் காத வழி."

என்பதும்,

சித்திரைமாதத்தில் ஒரூருக்குப் பிரயாணம்பண்ணிப் போகையில் வழிநடுவில் உள்ள திருச்செங்காட்டுச் சத்திரத்தில் ஒருநாளிராத் தங்கி யிருக்கும்பொழுது, காற்றுவீசாமல் தமக்கு அதிக வெப்பமாயிருந்ததுகண்டு காளமேகப்புலவர், பக்தசிரோமணியாகிய சிறுத்தொண்டரே! நீர் நமக்காக அரிந்து கறிசமைத்த பிள்ளையை நம்முடனே கூட உண்ணுதற்கு அழைத்துவாருமென்று சொல்லி, அப்பிள்ளையின் வரவை எதிர்பார்த்திருந்த சிவபெருமானுடைய திருச்செங்காடென்ற இந்த ஸ்தலத்தில் இதென்ன ஆச்சரியம்! காசிக் கங்கையைக் கமண்டலத்தில் முகந்து கையிலேந்திய அகஸ்திய முனிவனுடைய பொதியமலையிலிருந்து உண்டாகும் தென்றற்காற்றை, ஒற்றைக்கொம்பினை ஏந்திய விநாயகமூர்த்தியின் பிதாவாகிய பரமசிவன் பூஷணமாகப் பூண்ட சர்ப்பந்தான் இப்பொழுது உணவாக உட்கொண்டு விட்டதோ, எப்பொழுதும் இயங்குகின்றகாரணத்தாற் சதாகதியென்று பெயர் பெற்ற காற்று இயங்காததென்னமாயம் என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"அம்பேந்து கையா னவன்பதியி * ஐம்மாவைக்
கொம்பேந்தி தந்தைபணி கொண்டதோ—அன்பா
அரிந்த மகவை யழையென்று சொல்லி
இருந்தவன்றன் செங்காட்டிலே."

என்பதும்,

இந்தப்படி காளமேகப்புலவர் நவ நவமாகக் கருத்தமைத்துக் கவிபாடி ஸ்தலசரிசனம் செய்து வருகையில், திருமலைராசன் பட்டணத்திற் கல்வியில் மிகச்சிறந்தவர்களென்று அவ்வரசன் வியந்து கொடுத்த தண்டிகைப் பரிசுபெற்ற புலவர்கள் அறுபத்துநால்வரும், அவர்களுக்குத் தலைவனாகிய அதிமதுரகவி யென்பவனும் தமிழில் தங்களுக்குச் சமானம் ஒருவருமில்லையென்று அகங்கரித்து, உலகத்திலுள்ள மற்றப் புலவர்களையெல்லாம் மதியாமற் பலவாறாக நிந்தித்து அவமானப்படுத்தி வருகிறார்களென்றும், அதற்குத் திருமலைராயனும் உடன்பட்டிருக்கிறானென்றும் செய்திகேட்டு, வித்வான்களா யிருப்பவர்கள் ஆராயினுமென்ன, அப்படிப்பட்டவர்களை அவமதிக்கலாமா? அவர்களை இகழ்ந்ததுநம்மை இகழ்ந்ததல்லவா, பூர்வம் ஒட்டக்கூத்தனென்பவன், "கற்றது கையளவு கல்லாதுலகள" வென்றெண்ணாமல், தானே வித்தையில் அதிகவல்லவனென்று மமதைகொண்டு நெஞ்சிரக்கமின்றிப் புலவர்களைச் சிரச்சேதம் பண்ணிவந்தான். அதுகண்டு அக்காலத்திற் புகழேந்திப்புலவரானவர் அவனுக்குத் தக்கபடி கர்வபிராயச்சித்தம் செய்வித்து அனேகரைக் கொலைக்குத் தப்புவித்து ரட்சித்துப் புண்ணியம் தேடிக்கொண்டார். அந்தப்படி இந்தக்காலத்தில் திருமலைராயன் சமஸ்தானத்திலிருக்கும் வித்வான்கள் நான் நானென்று இறுமாப்புற்று 'நக்குகிறநாய் செக்கென்றும் சிவலிங்கமென்றும் அறியாததுபோல' நல்லார் பொல்லாரென்று அறியாமலும் "அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியாததுபோல"ப்பாடிய அருமை தெரியாமலும் பிரசண்டகவிகளையெல்லாம் பழித்துக்கொண்டிருக்கிறார்களே இவர்களுடைய அகந்தையை நாம் போய் அவசியம் அழிக்கவேண்டுமென்ற பிரதிக்கினையுடனே ஒருநாள் அவ்விடத்திற்குப்போக யத்தினப்படுகிற சமயத்தில் அவரை மோகனாங்கியென்னும் தாசி கண்டு, திருமலைராயன் பட்டணத்துத் துறைமுகத்தில் விசேஷமாய் முத்துக் குளிக்கிறதாகவும் அம்முத்து மற்றத்துறைகளில் குளிக்கப்படுகிற முத்துகளிலும் மிகச்சிறந்ததாகவும், திருமலைராயனே அந்தவியாபாரம் செய்வதாகவும் சொல்லுகிறார்கள், ஆகையால் அங்கே போய்த்திரும்பி வரும்பொழுது மறவாமல் எனக்கு மார்பிலணியுங் கச்சுக்கு முத்து வாங்கிவரவேண்டுமென்றாள். அதுகேட்டு நல்லது அப்படியே ஆகட்டுமென்று சொல்லி அவளிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு புறப்பட்டு அப்பட்டணத்துக் கடைவீதியிலே வந்தார்.

இவருக்கெதிரே மேற்சொல்லிய அதிமதுரகவியென்பவன் தனக்குப் பின்னும் முன்னும் இருபக்கங்களிலும் அறுபத்துநாலு தண்டிகைப் புலவர்களும் வரிசை வரிசையாக நெருங்கிச் சூழ்ந்துவர, அவர்கள் நடுவில் நீலமலையொன்று உரல்போலப் பருத்த கால்களும், பனைபோல நீண்ட துதிக்கையும், ஆலவட்டம்போலப் பரந்த செவிக

* ஐம்மா — கால், இது இவ்விடத்திற் காற்றினையுணர்த்தி நின்றது.

ளும், பிறைபோல வளைந்த கொம்புகளும், மலைச்சிகரம்போல உன்னதமாகிய மஸ்தகமும், சாமரம்போல அசைக்கின்ற வாலும் முளைத்து எழுந்து நடப்பதுபோல நடக்கின்ற மதயானைமேல் நவரத்னமயமாகய தவிசிட்டுஏறி, துஜம் சத்திரம் சாமரமுதலிய விருதுகள் பிடிக்க, கட்டியம்கூற அதிக ஆடம்பரத்துடனே ராஜசமுகத்தை நாடிவருவதுகண்டு, தாம் அப்பால் விலகிப்போகாமல் அப்புலவர்கள் ஏறிவரும் தண்டிகைக்கணைகளின் மத்தியில் வந்து நிற்க, அது கண்டு கட்டியக்காரன் தண்டிகைக் கணைக்குட்பட்டவர்கள் எப்படிப்பட்டவர்களாயினும், அவர்கள் தங்கள் வாயினால் அதிமதுரகவியென்பவனுக்குரிய விருதைச்சொல்வது நெடுநாளைய வழக்கமாயிருப்பதால் அவ்வழக்கப்படி, இவர் மார்பிலே தன்கையிலிருந்த மான்றோற் பட்டையால் தட்டி அதிமதுரகவிராய சிங்கம் பராக்கென்று சொல்லென்றான். இவர் இழவுக்கு வந்தவர்களையெல்லாம் தாலியறுக்கச் சொன்னால் அறுப்பார்களா, அதுபோலத் தெருவிலே போகிறவர்கள் வருகிறவர்களையெல்லாம் இவன் பெருமையைச் சொல்லச்சொன்னாற் சொல்வார்களா, ஆயினும் இவன்பெற்ற பெருமைதானென்ன? துடைப்பக்கட்டுக்குப் பட்டுக்குச்சுக் கட்டியதுபோல அதிமதுரகவிராய சிங்கமென்று பெயர்வைத்துக்கொண்டு விருதுகூறி வருகிறானே. இவன்பாடும் பாட்டென்ன அத்தனை மதுரமானதா? தன்னைச் சிங்கமென்று சொல்வதைப்பற்றிக் கொஞ்சமாவது இவனுக்கு மனங்கூசவில்லையே. இவன்எத்தனைவித்வான்களைச்செயித்தான். இஃதெல்லாம் வீண்புகழ்ச்சிதானே. இப்படிப்பட்டவன் வெட்கித் தலையிறக்கங்கொள்ளும்படி இவனைப் பரிகசிப்பதே யுக்தமென்று நினைத்துக் கட்டியங்கூறுவோனை நோக்கி, அதிமதுரம் அதிமதுரமென்று உலகமெல்லாம் அறியும்படி பறைசாற்றியதுபோலப் பலமுறையும் எடுத்துச் சொல்லி இவனை மதுரந்தோன்ற ஸ்துதிசெய்கின்றையே இவனிடத்திலுள்ள புதுமை என்ன. இப்படிச் சொல்வதைப்பார்க்கிலும், காட்டிலுண்டாகிய சரக்கு, காரமில்லாத சரக்கு, தனியே பிரயோகிக்காமல் வேறுசரக்குகளுடனே கூட்டிப் பிரயோகிக்கப்படும் சரக்காகிய மலைக்குன்றுமணிவேரை உலகத்தார் தொன்றுதொட்டு அதிமதுரமென்று வழங்குவது சகசமாதலால், நீ அதைக்குறித்துச் சொல்ன்னும் கருத்தை அமைத்து,

"அதிமதுர மென்றே யகில மறியத்
துதிமதுர மாயெடுத்துச் சொல்லும்—புதுமையென்ன
காட்டுச் சரக்குலகிற் காரமில்லாச் சரக்குக்
கூட்டுச் சரக்கதனைக் கூறு."

என்றொரு பாடலைச்சொல்லி ஏளனம் பண்ணினார்.

அது அதிமதுரகவி யென்பவனைத் தூக்கிப்போட்டாப்போலிருந்ததனால், அவன் ஆச்சரியப்பட்டு, சிறிதாவது பயமில்லாமல் இவ்வளவு தைரியத்துடனே பகிரங்கமாக நம்மைப் பரிகாசிக்கின்றானே, இவனாரென்று அறியும்படி தான்ராஜசமுகத்திற்குப் போய்ச்சேர்ந்தமாத்திரத்திற் சேர்வைகாரனொருவனை அனுப்பி இன்னவிடத்தில் ஒரு பிராமணனிருக்கிறான் அவனுடைய பெயரென்ன, அவன் எங்கிருப்பவனென்று விசாரித்தபொழுது காளமேகப்புலவர் என் பேர் ஊர் முதலானவைகளை வாய்ச்சொல்லாகச்சொன்னால் நான் சொன்னபடிநீபோய்ச்சொல்வது பிரயாசம். விவரமாய் ஏட்டில் என்கைப்பட எழுதிக் கொடுக்கிறேனென்பதாகச் சொல்லி,

"தூதைந்து நாழிகையி லாறுநாழிகை தனிற் சொற்சந்த மா
லைசொல்லத், துகளிலா வந்தாதி யேழுநாழிகைதனிற் றொகைபட்
விரித்து ரைக்கப், பாதஞ்செய் மடல்கோவை பத்துநாழிகைதனிற்
பரணியொருநாண்முழுதுமே,பாரகாவியமெலா மோரிரு தினத்திலே
பகரக்கொடிக்கட்டினேன்,சீதஞ்செயுந்திங்கண் மரபினானீடுபுகழ் செ
ய்யதிருமலைராயன்முன், சீறுமாறாகவே தாறுமாறுகள்சொல் திருட்
டுக்கவிப்புலவரைக், காதங்கறுத்துச் செருப்பிட்டடித்துக் கதுப்பிற்
புடைத்துவெற்றிக், கல்லணையி னொடுகொடிய கடிவாளமிட்டேறு
கவிகாளமேகநானே."

எனத்தாம் ஆசுகவிபாடும் திறத்தைச் சிறப்பித்தும், தமதுபெயரை வெளிப்படையாகச் செப்பியும், திருமலைராயன் சமஸ்தானத்து வித்துவான்கள் செய்யும் அக்கிரமத்தைக் குறிப்பித்து அவர்களை இகழ்ந்தும் ஒரு சீட்டுக்கவி எழுதி அதைச்சுருட்டிப் பந்தனம்பண்ணி, இதைக் கொண்டுபோய்க் கொடுவென்று கொடுத்தனுப்பினார்.

அதிமதுரகவிராயன் முதலானவர்கள் அதை வாங்கி வாசித்து இதை எழுதினவன் காளமேகனென்பவனா, பாம்புக்குப்பல்லிலும், தேளுக்குவாலிலும் ஏகதேசமாக விஷமிருக்குமென்பார்கள். இவனுக்கு உடல்முழுதும் விஷமயமாயிருக்கிறது. ஆதலால், இவன் பொல்லாததுஷ்டனென்றும், அகங்காரமே கால் கை முதலிய உறுப்புக்களாய் உருவெடுத்து வந்தவனென்றும், கண்டவர்கள்மேலெல்லாம் வம்பும் தும்புமாக வசைபாடுகிறவனென்றும் இவனுடைய சமாசாரம் முன்னமே நமக்குக் கேள்விதானே. அப்படியிருக்க இப்பொழுது நம்மையும் அவர்களைப்போல இலேசாக நினைத்துக்கொண்டு கொஞ்சமாவது மதிப்பில்லாமல் வாய்க்குவந்தபடி யெல்லாம் தூஷித்துச் சீட்டுக்கவி எழுதினான் பார்த்தையா! இப்படிப்பட்டவனைச் சும்மா விடப்போமா. கொட்டினால்தேள் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சி

யல்லவா. ஆதலால், இவனைச் சிலிர்க்கச் சிலிர்க்க வலித்து மானபங்கப்படுத்தித் தக்க சிட்சைசெய்வித்தாலொழிப இவன் அடங்கமாட்டானென்று தங்கள் அரசனுடனும் ஆலோசித்து, நாலுபெயர் சேவகர்களைவிடுத்து அந்தக் காளமேகனென்பவன் எங்கேயாவது, ஓடியொளித்துப் போகப்போகிறான். இந்தநொடிக்குள்ளே கைப்பிடியாகப் பிடித்துவந்து ஒப்பிக்கவேண்டுமென்ன, அந்நால்வரும் போய்ப் பெரும் புலிகள்போல் அவரைச் சுற்றிக்கொண்டு நீ சும்மாவருகிறையா, உன்னைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போகவேண்டுமா வென்றார்கள். புலவர் நீங்களார் என்னை எங்கே அழைக்கிறீர்களென்ன, அவர்கள் நாங்கள் திருமலைராயன் சேவகர்கள். அவரிடத்திற்குத்தான் உன்னை அழைக்கிறோமென்ன, இவர் அங்கு எதுக்காக வரச்சொல்லுகிறீர்களென்ன, சேவகர் நீ எங்கள் ராஜசமஸ்தானத்து வித்வான்களைத் தூஷித்தையே அதற்காகத்தானென்ன, இவர் பின்னையொன்றும் செய்யவில்லையே இதற்குத்தானா பிடிக்கிறதும் கட்டுகிறதும் என்னைத் தொடவேண்டாம் தூர நில்லுங்கள். நானே வருகிறேனென்று, கடையில் எலுமிச்சம்பழமொன்று வாங்கிக் கையில்வைத்துக்கொண்டு ராஜசமுகத்தை நோக்கி வருகிறார்.

இதற்குள் அவ்விடத்தில் அதிமதுரகவி யென்பவன் அறுபத்துநாலு தண்டிகைக்காரரையும் பார்த்துக் காளமேகமென்பவன் இவ்விடத்திற்குவந்தால் அவன் அரசனருகிற் கிட்டிச்செல்லாதபடி நீங்களெல்லாரும் நெருங்கி உட்கார்ந்து உங்களாசனத்தை விட்டெழுந்திராம லிருங்களென்று திட்டம்செய்து, பின்பு ராஜாவை நோக்கி அந்தவம்பனைத் தாங்கள் வாவென்றழையாமலும், அவனுக்கு ஆசனம் கொடாமலும், சம்மானம் செய்யாமலுமிருக்கவேண்டு மென்று சொல்லி எச்சரிக்கையா யிருந்தான். அப்படியிருக்கையிற் புலவர் பெருமான் வந்துபார்த்து நாம் உட்பிரவேசிக்கக்கூடாமல் இங்கே ஏதோ மித்துருபேதம் நடந்திருக்கிறதென்று கிரகித்துக்கொண்டு, தாம் உட்செல்லாமல் ஆஸ்தானவாசலண்டையிலிருந்தபடியே இதற்கேற்ற உபாயமொன்று செய்யவேண்டுமென்று, ஒரு சுலோகம் சொல்லி அரசனை ஆசீர்வதித்து அந்த எலுமிச்சம்பழத்தை அவனுக்கெதிரே நீட்டினார். பிராமணர்கள் ஆசீர்வாதம்பண்ணி அட்சதையாவதுபுஷ்பமாவதுமற்றெதுவாவதுகொடுக்கநேர்ந்தால் வாங்காமலிருப்பது விதியல்லவே. அதுபற்றி அவன்தன் கையைநீட்டினான். நீட்டிய கையில் இந்த எலுமிச்சம்பழம் போய்ச் சேரவேண்டுமே அதனால் யாவரும் விலகி வழிவிட்டார்கள். காளமேகப்புலவர் 'தாராளமாக அச்சபைநடுவே சென்று அதை வேந்தன்கையிற்கொடுக்க அவன் வேண்டாமென்று சொல்லாமல் வாங்கிக்கொண்டதன்றி, அவருக்கு

ஆசனம் கொடுக்கவுமில்லை, உட்காருமென்றுசொல்லவுமில்லை. அதுதெரிந்து ஜம்புகேசுரத்தின் திசையை நோக்கி மானசிகமாக ஸ்ரீஅகிலாண்டவல்லி விமானத்தைத்தரிசித்து, சாரதையைத் தியானித்து,

"வெள்ளைக் கலைபுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனத்துவைத்த தாய்."

என்பதை 'உள்ளிட்டமுப்பது வெண்பாவிற் சரசுவதிமாலையென ஒரு பிரபந்தம் பாடினார். பாடினமாத்திரத்தில் வாணிகடாட்சத்தால் திருமலைராயனிருந்த ஆசனம் ஒரு புறத்தில் வளர்ந்து இடங்கொடுக்க, அதில் அவர் அவனுடன்சமானஸ்கந்தமாக வீற்றிருந்தார்.

இவ்விதமாக ராஜசிங்காசனம் வளர்ந்து இடங்கொடுக்க அவர் அதன்மேலேறி உட்கார்ந்த தருணத்தில் அவர்களெல்லாம் அதென்ன மந்திரமோ, மாயமோ, அல்லது கண்கட்டுவித்தையோவென்று பிரமிப்புடனே பார்க்கையில், புலவர்பெருமான் அந்தப் புலவர்களை என்னை வைத்தகண்வாங்காமல் ஊடுருவப் பார்க்கிறீர்கள் நீங்களார் தெரியச்சொல்ல வேண்டுமென்று கேட்க, அவர்கள் நாங்கள் இந்தச் சமஸ்தானத்திலிருக்கும் கவிராஜர்களென்று உத்தரஞ்சொல்ல, இவர் கவிராஜரென்பதற்குக் குரக்கரசரென இடக்கராகப் பொருள்கொண்டு, குலுக்கென்று நகைத்து அவர்களை உல்லங்கனம் பண்ணும்படி ஓ! ஓ! புவியரசர்களாற் புகழப்படும் புலவர்களே! நீங்களாரென்று உங்களைக்கேட்டாற் கவிராஜர்களென்கிறீர்களே கவிராஜர்களாயிருந்தால் உங்கள் ஜாதிசுபாவப்படிவாலிருக்கவேண்டுமே, அதெங்கே? வாலில்லாமையால் நீங்கள் வாலில்லாத குரங்குகளென்றல்லவோ சொல்லப்படுவீர்கள். அப்படித்தானென்று ஒப்புக்கொண்டாலும், நீண்டு வளர்ந்து வலிபெற்ற நகமிருக்க வேண்டுமே அதெங்கே? அல்லாமலும் நாலுகாலிருக்கவேண்டுமே அவைஎங்கே? காலாகக் கையைப் பாவித்துக் கொள்ளலாமென்றாலும், பீளைசார்ந்த கண்ணிருக்க வேண்டுமே அதெங்கே? சொல்லுங்களென்னும் கருத்தினை உள்ளமைத்து,

"வாலெங்கே நீண்டெழுந்த வல்லுகிரெங் கேநாலு
காலெங்கே யூன்வடிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்கா ணீங்கள்
கவிராய ரென்றிருந்தக் கால்."

என்றொரு வெண்பாப் பாடினார். இதிற் குரங்குகளென்று அழித்துரைத்தாலும், அவர்களைப்போலத் தாமும் புலவராகையால் அந்

தச் சுசாதி யபிமானம் போகாமற் புவிராயர்போற்றும் புலவீர்காளென்று சிறப்பித்தார்.

அதை அவர்கள் அவ்விதமாக நினையாமல் இவன் எட்டிக் குடுமியைப் பிடித்து இறங்கிக் காலைப்பிடிக்கிறவன்போல, இந்தப் பாட்டிலே நம்மையெல்லாம் குரங்குகளென்று பிரத்தியக்ஷத்திலேயே நிந்தித்து, அதனோடுகூடக் கொஞ்சம் முகஸ்துதியாகப் புவிராயர்போற்றும் புலவீர்காளென்றான். முன்பு சீட்டுக்கவியிலும் தூஷித்திருக்கிறான். இவனுடைய நெஞ்சுத் துணிவுதான் என்னவென்று சிந்தித்துப் பிறகு அவரை நோக்கி, இந்தச் சமஸ்தானத்தில் வெகுகாலமாகப் பெயர்பெற்றிருக்கின்ற எங்களை இன்று வந்துமுளைத்த நீ ஆரென்று கேட்கிறையே நீயார் சொல்லென்று கேட்டார்கள். இவர் நாம் காளமேகமென அறியீர்களாவென்ன, அவர்கள் நீ காளமேகமா நல்லது, காளமேகமென்பது கறுத்தமேகமாதலாற் பொழிய வேண்டுமேயென்ன, இவர் பொழியத்தான் வந்ததென்ன, அவர்கள் எப்படிப் பொழியவந்ததென்ன, புலவர் சிரோமணி, கருமைநிறத்தினையுடைய கடல்நீரானது உப்புமயமாயிருப்பதென்று அதை விடுத்துச்செல்லும்சாஸ்திரமாகிய கடலில் அதன்சாரமாகியநீரைமுகந்து, அருவியாறு வழிந்தோடுகின்ற தமிழ்பிறந்த பொதியமலையிற் காலூன்றி, கடுமையாகிய கவிகளைப் பாடுகின்ற புலவர்கள் மனத்தின்கண்ணே பயஞ்சனிக்க இடித்து, அவர்கள் காதுகள் செவிடுபடக் குமிறி, கண்கூச மின்னி, கவியாகிய மழைபொழியும்படி கவிசிரேட்டனாகிய காளமேகமானது புறப்பட்டதென்னும் கருத்தைஅமைத்து,

"கழியுங் கரிய கட லுப்பென்று நன்னூற் கடலின்மொண்டு
வழியும்பொதிய வரையினிற் கால்வைத்து வன்கவிதை
மொழியும்புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும்படிக்குக் கவிகாளமேகம் புறப்பட்டதே."

என்றொரு பாடல் பாடக்கேட்டு, அதிமதுர கவியென்பவன் அதிக ஆச்சரியங்கொண்டு அவரை முன்னிட்டு, வெள்ளைக்கவி பாடித் திரிகின்றகாளமேகமே! மூச்சுவிடுதற்கு முன்னமே முந்நூறு, அல்லது நானூறு பாடல் பாடப்போகாதா? மூச்சு விட்டாச்சுதென்றால் ஐந்நூறு பாடல்வரையிலும் ஆகாதா? இதற்கித்தனை பேச்சென்ன, சும்மா ஆடம்பரமாக உன்னுடைய கள்ளக் கவிக்கடையைப் பரப்பவேண்டாம். அந்தமட்டிலே அதைக் கட்டென்னும் கருத்துத்தோன்ற,

"மூச்சுவிடு முன்னமே முந்நூறு நானூறும்
ஆச்சென்றா லைந்நூறு மாகாதோ—பேச்சென்ன

வெள்ளைக் கவிக்காள மேகமே யுன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு."

(ஆயிற்றென்பது-எதுகைநோக்கி ஆச்சென மரூஉவாக அமைக்கப்பட்டது, வெள்ளைக்கவி-வெண்பா) என்றொரு பாடலைச் சொல்லி அவன் தன்பெருமையை வெளியிட்டுக் கவிசிரேஷ்டராகிய இவரை இழிவுசெய்தபொழுது, இவர் நீ மூச்சுவிடுகிறதற்குமுன்னே முந்நூறு நானூறு பாடல்வரையிலும், ஆச்சென்றால் ஐந்நூறு பாடல்வரையும் பாடுகிறதாகச் சொன்னையே-இஃதோராச்சரியமா, நான் சொல்வதைக்கேள். வாயைத்திறவாததற்குமுன் எழுநூறு எண்ணூறு பாட்டளவிலும், ஒருமுறை வாயைத்திறந்து மூடினால் ஆயிரம் பாட்டளவிலும் ஆகாதா, பாடுகிறதற்கு ஒரு நிமித்தமுமில்லாத காலத்திற் சும்மா விருந்தாலிருப்பேன். ஆவசியகமுண்டாய்ப் பாட ஏற்பட்டேனானால், யானைத்துதிக்கைபோலப் பெரிய தாரைகளாக வருஷிக்கும் மேகம் நானென்று நினை பிள்ளாயென்னும் கருத்தை யமைத்து,

"இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாதா—சும்மா
இருந்தா லிருப்பே னெழுந்தேனே யாயிற்
பெருந்தாரை மேகம் பிள்ளாய்."

[இம்மெனல் - வாய்திறவாமையையும், அம்மெனல் - வாய்திறந்துமூடுகையையும் உணர்த்திய குறிப்புச் சொற்கள்] என்பதாக ஒரு கவி பாடித் தமது வல்லமையைக் குறிப்பித்தார்.

அதை மதுரகவி கேட்டு, தூக்கிநிறுத்தடா பிணக்காடாய் வெட்டுகிறேனென்பவனைப்போல வெகு சாமர்த்தியமாகப் பேசுகிறானே-இவன் சொல்வது மெய்யாயிருக்குமா, அஃதேது "ஆராத்தாள் செத்தாலும் பொழுதுவிடிந்தால் தெரியு" மென்பதுபோல, இன்னும் சற்றுநேரத்திற்குள்ளே பொய் மெய்யெல்லாம் பட்டப்பகலாய்த் தெரியவருகிறதென்று நினைத்துக் காளமேகப் புலவரை நோக்கி, 'கூரம்பாயினும் வீரியம்பேசே' லென்பதை அறியாமல் நீ இவ்வளவு வீரம் பேசுகிறையே-அரிகண்டம்பாடு பார்ப்போமென்றான். இவர் அரிகண்டமாவது என்னவென, அவன் கழுத்திற் கத்தி கட்டிக்கொண்டு எதிரி கொடுக்கும் சமிசைக்கு இணங்கப் பாடுவதுவான். அப்படிப் பாடுமிடத்தில் ஏதாவது தவறினால் அந்தக் கத்தியினாலேயே வெட்டுண்ணவேண்டி வருமென்ன அதற்கு இவர் கை கொட்டிச் சிரித்து இதுதானா அரிகண்டமென்பது? இத்தனை சுலபமானதை ஒரு விஷயமாகத்தேடிச் சொல்லவந்தையே இதிலென்ன

அருமையிருக்கிறது? அதுநிற்க, யமகண்டம் பாடுகிறதல்லவோ மகாப்பிரயாசம். அதைக்குறித்துப் பேசுவதுதான்கௌரவமென்று சொல்ல, அவன் யமகண்டமென்றும் ஒன்றிருக்கிறதா, அது எப்படிப்பட்டதென்ன, இவர் பூமியிற் பதினறடி நீளம், பதினறடி அகலம், பதினறடி ஆழமாக, சதுரத்திற்குச் சதுரம் ஒரு பெரிய குழி வெட்டி, அதன் நான்கு மூலையிலும் பதினறடி இருப்புக்கம்பங்கள் நாட்டி, கம்பத்தின்மேல் நாலுபக்கத்திலும் இரும்பினல் நாலுசட்டமும், நடுவே யொருசட்டமும் போட்டு, நடுச்சட்டத்தில் உறிகட்டிக் குழிக்குள் பருத்த புளியங்கட்டைகளை நெருங்க அடுக்கி, கட்டைக்குள் நெருப்புமூட்டி, அது கனன்றெழுந்து சுவாலித்து எரிந்துகொண்டிருக்க, அந்நெருப்பில் ஒரு ஆளுபரமான இருப்புக் கொப்பரைவைத்து, கொப்பரைநிறைய எண்ணெய்விட்டு அதில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணிகளை நிரப்பி, அவை நன்றாய்க்காய்ந்து உருகிக் கொதித்துக்கொண்டிருக்க, நான்கு யானைகளைப் பாகர்கள் மதமேற்றிக் கொண்டுவந்து கம்பத்திற்கு ஒவ்வொன்றாக மலைகளைப்போல நிறுத்தி வைத்திருக்க, பின்புறத்தில் வளையம் வைத்து வளையத்திற் சங்கிலிகோத்து நயத்த எஃகினற் கூர்மையாகச் சமைத்துப் பளபளவென்று மின்னும்படி சாணைபிடித்த எட்டுக் கத்திகளைக் கழுத்தில் நாலும், அரையில் நாலுமாகக் கட்டிக்கொண்டு, கத்திகளின் புறத்திலுள்ள சங்கிலிகளை மேற்படி யானைகளின் துதிக்கையிற் கொடுத்துவைத்து, தான் கொப்பரைக்கு நேராகத்தொங்குகின்ற உறிநடுவில் ஏறியிருந்து, எவரெவர் என்ன என்ன சமிசை கொடுத்தாலும் அவைகளை அந்நொடியிலேதானே தடையின்றிக் குறித்த கருத்தின்படி இசைத்துப் பாடவேண்டியது, அவ்வாறு பாடும்பொழுது எவ்வளவாவது வழுவுமானற் சமிசைகொடுத்வர்கள் யானைமேலிருக்கும் பாகர்களுக்குக் கண்சைகைகாட்ட, அவர்கள் யானைகளை மஸ்தகத்தில் அங்குசத்தாற் குத்தி அதட்ட, அவைகள் தமது தும்பிக்கையிற் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கிலிகளை விசையாயிழுக்க, இழுத்தவுடனே புலவன் கழுத்தும் அரையும் கத்திகளாற் கண்டிக்கப்பட்டு, தலையொருதுண்டமும், அரைமுதற் காலளவும் ஒருதுண்டமுமாகி, அவ்வெண்ணெய்க் கொப்பரையில் விழுந்து மாண்டுபோவதாகிய முறையினையுடையதுதான் யமகண்டமென்றார்.

காளமேகப்புலவர் இவ்வண்ணம் சொல்லக்கேட்ட மாத்திரத்தில், மதுரகவி மனம் திடுக்குற்று அடா அப்பா யமகண்டமென்பது இப்படிப்பட்ட கோரமானதா, இது உள்ளபடி யமகண்டத்திற்கு

ஒப்பாயிருப்பதனாலே தான் இதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டதாகக் காண்கின்றது. இவ்வாறுசெய்ய ஆராலேயாகும், அசாத்தியம் அசாத்தியமென்று தனக்குள்ளே எண்ணி அதிசயித்து, பின்பு புலவர் பெருமானைப் பார்த்து நீ சொன்ன யமகண்டம் தகுதியானதுதான். ஆயினும் சும்மா வாயினாலே டம்பமாகச் சொல்வதனால் என்னபிரயோசனம். "மாடுதிருப்பினவனல்லவோ அர்ச்சுனன்" அதுபோல, சொன்னபடி செய்வதல்லவோ கௌரவம், ஆகையால் செய் பார்ப்போமென்றான். இவர் சபாசு ஆடவிட்டு நாடகம் பார்க்கிறதுபோல என்னைச் செய்யச்சொல்லிப் பார்க்கிறதென்ன, நீ முதல்முதல் இந்த விஷயத்தை எடுத்துப் பேசினதனாலும் வெகுநாளாக யாவருமறிய நடுத்தெருவிலே, அதிமதுரகவிராயசிங்கம் பராக்கென்று விருது கூறிக்கொண்டு வருகிறபடியினாலும், செய்யவேண்டிய கடமை உன்னுடையதே. அப்படியிருக்கக் குரங்கு குட்டி கையைத் தேய்க்கிறதுபோல என்மேலேசார்த்தி என்னைத் தூண்டிவிட்டு நீ தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது சரியோ. இது விருதுகூறிவந்து செடியில் நுழைகிறது போலாகுமல்லவோ வென்றார்.

அத்தருணத்தில் அதிமதுரகவியும் அறுபத்துநாலு தண்டிகைப்புலவரும் திருமலைராயன் முன்னிலையில் ஒருசேரக்கூடி, இவன் எதிரிகளை மதியாத துன்மார்க்கனா யிருக்கிறபடியினாலே, தந்திரமாக இவனையே அந்த யமகண்டத்தில் மாட்டி இவனுடைய தொழுப்பை அடக்கவேண்டுமென்று தங்களுக்குள் ஆலோசித்துக்கொண்டு, அப்படிச் செய்யவேண்டுமென்று எங்களுக்கு ஆவசியகமில்லை. நீயே உன்னை அதிகசமர்த்தனென்று பெருமைப்படுத்தியும் எங்களை யிழித்தும், சீட்டுக்கவிபாடி யனுப்பினதனாலும், நாங்கள் சுளுவாக அரிகண்டம் பாடச்சொன்னால், கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்ததுபோல, அதைவிலக்கி உன்வாயினாலேயே யமகண்டம் பாடுகிறதைக் குறித்துப் பேசினதனாலும், நீதான் அந்தப்படி செய்யவேண்டுமென்றார்கள்.

அவர்கள் அப்படிச் சொல்லக்கேட்டுப் புலவர் சிகாமணியானவர் கல்வித் திறமும் கவி சாதுரியமு மில்லாத இவர்களை யமகண்டம் பாடச்சொல்லுகிறது, வீரமில்லாத பேடியைப் போருக் கழைக்கிறது போலல்லாமல் வேறன்று. அதனால் அதை நாமே செய்துகாட்டி இவர்கள் இறுமாப்பை அடக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, நீங்கள் வருத்தப்படவேண்டாம். தலைகீழாகக் கரணம் போட்டாலும் இது உங்களால் ஆகத்தக்கதல்ல. நானே செய்கிறேன் பாருங்களென்று உடன்பட்டார். அவர் உடன்பட்ட

மாத்திரத்தில் அவர்கள் இனித்தாமதிக்கலாகாதென்று யமகண்டத்தைக்குறித்து அவர் சொன்னபடி ஏவலாளர்களைக்கொண்டு ராஜாவின் சபாமண்டபத்திற்கு நேரிலே குழி வெட்டித் தழல்மூட்டி எண்ணெய்க் கொப்பரைவைத்துக் குழிக்கு நாற்றிசையிலும் இருப்புக்கம்பம் நாட்டிக் கம்பத்தின்மேற சட்டம்போட்டு நடுச்சட்டத்திற் கொப்பரைக்குமேலே உறிகட்டிப் பாகர்களால் யானைகளை மதமேற்றிக் கொண்டுவந்து கம்பத்திற் கொவ்வொன்றாக நிறுத்தும்படி செய்தார்கள். புலவர்பெருமான் கழுத்திற்கும் அரைக்கும் கத்திகட்டிக்கொண்டு கத்திகளின் பின்னுள்ள வளையங்களிற் கோத்திருக்கும் சங்கிலிகளை யானைகளின் கையிற் கொடுத்துவிட்டுத் தாம் உறியின்மேலேறி முகமலர்ச்சியுடனே மண்டலித்திருந்து, திருமலைராயனுடைய அனுமதி பெற்றுக்கொண்டு அதிமதுரகவி முதலானவர்களை நோக்கி இனி நீங்கள் காலதாமசம் செய்யாமல் உங்களிஷ்டப்படிக்கு கொடுக்கவேண்டிய சமிசைகளைத் தடையின்றித் தாராளமாகக் கொடுக்கலாமென்ன, அவர்கள் இவருடைய தைரியத்தையும் முகவிலாசத்தையும் உறியேறிப் பயமின்றிக் காம்பீரமாக வீற்றிருப்பதையுங்கண்டு அம்மம்மா! இவனுடைய தைரியந்தான் எப்படிப்பட்டதென்று ஆச்சரியப்பட்டு, நாமிதை முற்றமுடியப் பார்க்கவேண்டுமென்று யாவருஞ்சமீபத்தில் வந்திருந்து, அவரவர் வெவ்வேறே மிகவும் அருமையாக ஆராய்ந்து தேடியெடுத்துத் தங்களிஷ்டப்படிக்கெல்லாம் நாநாவிதமான சமிசைகள் கொடுக்க, அவைகளெல்லாவற்றையும் அகிலாண்டநாயகி அனுக்கிரகத்தாற் பொருள்செய்யாமலும், எவ்வளவேனும் இடர்ப்படாமலும், அவர்கள் கொண்ட கருத்துக்கிணங்கும்படி சித்திர விசித்திரமாய் நல்ல நயந்தோன்றஅஃததற்குத்தக்க அலங்காரங் களும்அமைத்து விரைவாகப் பாடினர்.

அதிமதுரகவியும், அறுபத்துநாலு தண்டிகைப்புலவர்களும் தனித்தனி கொடுத்த சமிசைகளும் காளமேகப்புலவர் பாடிய பாடல்களும்.

பிரதமத்தில் அதிமதுரகவி, திருமாலவதாரம் பத்தும் ஒரு வெண்பாவில் அடக்கிப் பாடவேண்டுமென்ன, புலவர்பெருமான் இதற்கு ஒரு வெண்பாவும் வேண்டுமோ நான் பாதிவெண்பாவிற் பாடுவேனென்று பாடிய செய்யுள்.

“மெச்சுதிரு வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சன்ம மியம்பவா—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய்.”

இதன்பொருள். தேவரும் முனிவரும் யாவரும்மெச்சுகின்ற திருவேங்கடத்தில் வீற்றிராநின்ற பெருமாளே அடியேன் அபீஷ்டப்படி பாதிவெண்பாவில் உனது திருவவதாரம் பத்தும் இசைத்துக் கூறும்பொருட்டு நீ என்முன்னெழுந்துருளக் கடவாயென்று முற்பாதியில் திருவேங்கட முடையானைப் பிரார்த்தித்து, தாம்பிரார்த்தித்தவண்ணம் பெருமாள் கடாட்சவிசேஷத்தால் அப்பத்தவதார மூர்த்திகளும் தமக்குப் பிரசன்னமாகக்கண்டு, பிற்பாதியில் மசசா, கூர்மா, வராகா, நரசிங்கா, வாமனா, பரசுராமா. ரகுராமா, பலராமா. கிருஷ்ணா, கற்கியாவோனேயென்று.திருநாமங்களைத் தனித்தனியே குறித்து அழைத்தாரென்பதாம். இச்செய்யுளுக்கு, மெச்சுகின்ற திருவேங்கடத்தானே? பாதிவெண்பாவில் என்னிஷ்டப்படி மச்சா, கூர்மா, வராகா, நரசிங்கா, வாமனா, பரசுராமா, தசரதராமா பலராமா, கிருஷ்ணா, கற்கியென்று உன்திருவவதாரத்தைச் சொல்லும்படி வாவென்று பொருள் கூறுவாருமுண்டு. [என்றென்பது-சொல்லெச்சம்.]

அறுபத்துநாலு புலவர்களில் ஒருவர் இராசிகளின் பெயரும் முறையும் தொகையும் அடைமொழியில்லாமல் ஒரு வெண்பாவில் அமைத்துப் பாடவேண்டுமென்ன, முதலிற் ‘பகருங்கா’ லெனவும் இறுதியில் ‘வசையறு மிராசிவள மெனவும், சேர்த்துக்கொண்டு அவ்வாறே பாடியசெய்யுள்.

"பகருங்கான் மேடமிடபம் மிதுனங்கர்க்க
டகஞ்சிங்கங் கன்னிதுலாம் விர்ச்—சிகந்த
னுசுமகரங் கும்பமீ னம்பன்னி ரண்டும்
வசையறுமி ராசி வளம்."

என்பதாம். (இடபம் மிதுனமென்பதில், மகரவொற்று விரித்தல் விகாரம்.)

ஒருவர், மும்மூர்த்திகள்பெயர், அவர்கள் தின்னும்கறி, உண்ணுமுணவு, ஏந்தும் ஆயுதம், பூணும் பூஷணம், ஏறும் வாகனம் வசிக்குமிடங்களை ஒரு வெண்பாவில் அடக்கிப்பாடவேண்டுமென்ன, அப்படியே பாடிய செய்யுள்.

"சிறுவனளைபயறு செந்நெற்கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூல்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றூழம் பூவே கறி."

இ-ள் பிரமன் சிவன் விஷ்ணுவென்னும் மூவர்க்கும், பிள்ளை, வெண்ணெய்-பயறு கறி, செந்நெல்-விஷம்-பூமிஉணவு, மான் சக்கரம்-தண்டம் ஆயுதம், கௌஸ்துவம்-உபவீதம் -சர்ப்பம் பூஷணம், ரிஷபம்-கருடன் - அன்னம் வாகனம், கைலை- பாற்கடல் - தாமரை வசிக்குமிடமென்பதாம்.

ஒருவர், ஈயேறி மலைகுலுங்கினதாக ஒரு வெண்பாப்பாடவேண்டுமென்ன, மலைமாத்திரமா உலகமுழுதும் குலுங்கியதாகப் பாடுகிறேனென்று பாடியசெய்யுள்.

"வாரணங்க ளெட்டு மகமேரு வுங்கடலுந்
தாரணியு நின்று சலித்தனவால்—நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னலடித்த
புண்வாயி லீமொய்த்த போது."

இ-ள். ஸ்ரீமந்நாராயணன் கண்ணபிரானாக அவதரித்திருக்கையில் திருவாய்ப்பாடியில் வெண்ணெய் திருடினனென்று அவனை இராகம்போன்ற சொல்லினையுடைய அசோதைப்பிராட்டி பருத்தமத்துக்கொண்டு அடித்தபுண்ணில் ஈயானது மொய்த்தபொழுது, அருவருப்புண்டாகி அவனருமைத்திருமேனி அசைய, சதாகாலமும் திருவுதரத்திற்குள் அசையாது வைத்து அவனாற் பாதுகாக்கப்படும் உலகமும், அதிலுள்ள அஷ்டதிக்குயானைகளும், மகாமேருவும், சப்த சாகரங்களும் அசைந்தன வென்பதாம்.

ஒருவர் "குடத்திலே கங்கையடங்கும்" என்பதாகப் பாடவேண்டுமென்ன, அவ்வாறே பாடிய செய்யுள்:

"விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த விறைவர் சடாம
குடத்திலே கங்கையடங் கும்."

இ-ள். கங்காநதியானது அகன்ற வானத்திற்குள்ளும் அடங்காமல், இமயகிரி முதலாகிய மலைகளுக்குள்ளும் அடங்காமல், பூமிக்குள்ளும் அடங்காமல் எங்கும் சம்பூரணமாகப் பொங்கிப் பெருகி வந்தாலும், உமாதேவியை இடதுபாகத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய ஜடாமகுடத்தில் அடங்கிற்கு மென்பதாம். [மகுடத்திலேகங்கை யடங்குமென்பதன் முதலெழுத்தாகிய மகரத்தைப் பிரித்து மூன்றும் அடியின் இறுதியிற்சேர்த்து, குடத்திலேகங்கையடங்குமென்பதைச் சமிசைக்கேற்க நான்காமடியிற் பொருத்தி முடித்தார்.]

ஒருவர் ஒன்றுமுதற் பதினெட்டெண்களை முறையே அடைசொல்லில்லாமல் ஒரு வெண்பாவில் அடக்கிப் பாடவேண்டுமென்ன, அப்படியே அடக்கிப் பாடியசெய்யுள்:

"ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு எழெட்டு
ஒன்பது பத்துப் பதினொன்று—பன்னி
ரண்டுபதின் மூன்றுபதி னன்குபதி னைந்துபதி
னறுபதி னேழுபதி னெட்டு."

என்பதாம்,

ஒருவர், முதற்சங்கத்தின் தொகையும், இடைச்சங்கத்தின் தொகையும், கடைச்சங்கத்தின் தொகையும் ஒரு வெண்பாவில் அடக்கி, அம்மூன்று சங்கத்தார்க்கும், அறுபத்துநாலு திருவிளையாடலுக்கும் "கர்த்தன் மதுரையிற்சொக்கன்" என்பது பபனிலையாய் ஈற்றடியில் வரும்படி முடிக்கவேண்டுமென்ன, அவ்வண்ணமே முடித்த செய்யுள்:

"நாலாநா லாயிரநா னூற்றுநாற் பததொன்பான்
பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்கும்
கர்த்தன் மதுரையிற்சொக் கன்."

ஒருவர், கடல்நடுவிற் செந்தூ ளெழும்பினதாகப் பாடவேண்டு

மென்ன, அப்படியே கருத்துக் கற்பித்துப்பாடியசெய்யுள்:

"சுத்தபாற்கடலி னடுவினிற்றாளி தோன்றிய வதிசயம்
மதுகேள், மத்தகக்கரியை யுரித்தவன்மீது மதன்பொருதழிந்திடு
மாற்றம், வித்தகக்கமலே செவியுறக்கேட்டாள் விழுந்துநொந்தயர்ந்
தழுதேங்கிக், கைத்தலமலரான் மார்புறப்புடைத்தா ளெழுந்தது
கலவையின் செந்தூள்."

இ-ள். மலினமில்லாத திருப்பாற்கடலின் நடுவிற் செந்தூளெழு ம்பிய அதிசயத்தைச்சொல்லுகிறேன்கேள். தாருவனத்து முனிவு ர்கள் விடுத்தமஸ்தகத்தின் யானையின் தோலையுரித்து ஏகாசமாக ப்போர்த்த சிவபிரான்மேல் படையெடுத்துப் போர்செய்து மன்மத னாகியபிள்ளை இறந்தசெய்தி, அவனுடையதாயாகிய சாதுரியமுடை ய ஸ்ரீமகாலட்சுமி செவியில்வந்து புகும்படிகேட்டு அவள் கீழே விழுந்து மனம்நொந்து அழுது மலர்போன்ற தன்னிருகைகளையும் உயரஎடுத்து மார்பில் தாக்கும்படி அடித்துக்கொண்டாள். அத னால் அம்மார்பில் அப்பியிருந்த குங்குமக்கலவைச் செந்தூளெ ழுந்து பரந்ததென்பதாம். [சுத்தப்பாற்கடலென்பது-சுத்த பாற்கடலெனச் செய்யுள் விகாரமாயிற்று.]

பிறவாநெறி காட்டியார் என்னும் பெயருடையவர், 'பெருங் காற்றுமழைகாட்டும் பெருநட்புப் பகைகாட்டும்' என்று ஒருவெ ண்பாப்பாடவேண்டுமென்ன, அங்ஙனமே அவரைக் கடிந்து பாடி யசெய்யுள்.

"நீரே பிறவா நெறிகாட்டி யாரெமக்கு
நீரே சமிசை நிலையிட்டீர்—நீரேயிவ்
விங்களமேன் செய்தீர் விடுங்கடுங்காற் றும்மழைகாட்
டுங்கடுநட் புப்பகைகாட் டும்"

இ-ள். பிறவா நெறிகாட்டியாரென்று யாவராலும் சிறப்பித்துச் சொல்லப்படும் பிரபலமான பெயர்பெற்றவர் நீர்தாமோ, எமக்குஇ ப்படிப்பட்ட சமிசை கொடுக்கத் தலைப்பட்டவர் நீர்தாமோ. எதுக் காக நீரிந்தவிங்களம் செய்ய ஏற்பட்டீர். அந்த மட்டிற் போதும் வி ட்டுவிடும். கடுங்காற்று மழைகாட்டும் கடுநட்புப்பகைகாட்டுமென் பதாம். விங்களம்-டம்பம்.

ஒருவர்,ஆமணக்குக்கும் யானைக்கும் உவமைதோன்ற ஒருபா டல் பாடவேண்டுமென்ன, அங்ஙனமே சிலேஷித்துப் பாடியவெண் பா:

"முத்திருக்குங் கொம்பசைக்கு மூரித்தண் டேந்திருவம்
கொத்திருக்கு நேரார் குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்."

இ-ள். எத்திசைகளிலும் இனிமையாகப் பரிமளிக்கின்ற மல ர்ச்சோலைசூழ்ந்த திருமலைராயனுடைய வெற்பகத்தில், ஆமணக் கு முத்துடைத்தாயிருக்கும், கொம்பசையாநிற்கும், நெரிகின்ற தண் டேந்திவளரும். காய்கள் கொத்துக்கொத்தாயிருக்கும். நேர்மை யாகிய குலைகள் சாய்ந்திருக்கும் ஆதலாலும், யானை தன்னகத்தில் முத்திருக்கும் கொம்பினை அசைக்கும் வலிபெற்ற இருப்புலக்கை யைத் துதிக்கையில் ஏந்திவரும், மஸ்தகத்திற் பாகன் அங்குசத்தாற் குத்திய தழும்பினையுடைத்தாயிருக்கும், பகைவர் ஈரற்குலையைச் சா ய்க்கும் ஆதலாலும் இவ்விரண்டும் ஒன்றனையொன்று ஒக்கு மென்பதாம்.

ஒருவர், வைக்கோலுக்கும் யானைக்கும் ஒப்புமைதோன்றப் பாடவேண்டுமென்ன, அவ்வாறே சிலேஷித்துப் பாடியவெண்பா,

"வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
சேக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்."

இ-ள். அழகிற்சிறந்த இளங்காளைபோலும் மேனியையுடைய திருமலைராயனது வெற்பகத்தில் வைக்கோல் உழவர்களாற் கற் றைகற்றையாக வாரியெடுத்துக் களத்தில் அடிக்கப்படும். பிறகு அங்கிருந்து கொண்டுவந்து மதில் கட்டியுள்ளே சேர்க்கப்படும், அன்றியும் போரிடப்பட்டுச் சிறந்து பொலிந்திருக்கும். ஆத லாலும் யானை பகைஞர்களைவாரி யுத்தகளத்தில் அடிக்கும். யுத்த த்தில் வெற்றி சிறந்து பொலிவுபெற்றிருக்கும், பின்பு திரும்பிவந் து கோட்டைக்குட் பிரவேசிக்கும் ஆதலாலும் இவ்விரண்டும் ஒன் றுக்கொன்று ஒப்பாகும்மென்பதாம். (சேக்கோல மென்பது சேவினதுகோலம்.)

ஒருவர் பாம்புக்கும் எள்ளுக்கும் ஒப்பிட்டு பாடவேண்டுமென் ன, அவ்வாறே சிலேஷித்துப் பாடியசெய்யுள்.

"ஆடிக் குடத்தடையு மாடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடுமண்டை

பற்றிப்பரபரெனும் பாரிற்பிண்ணாக்கு முண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே போது."

இ-ள். பாம்பு படமெடுத்தாடிக் குடத்திற்குள் அடைந்திருக்கும், ஆடும்பொழுதே இரைச்சலிட்டாடும்; பெட்டியிலாயினும் குடத்திலாயினும் இட்டு மூடித்திறந்தால் தலையை நீட்டிக்காட்டும். கடித்தவுடனே அதன் விஷமானது மண்டையில் ஓடிப்பற்றிப் பரபரவென்றுநமைபுண்டாகும், அதற்குப்பிளவாகியநாக்குமிருக்கும். ஆதலாலும் எள் செக்காடி அதன்சாரமாகிய தைலம்குடத்திற் சேர்க்கப்படும், செக்காடும்பொழுதோ இரைச்சலிடும். குடத்திற்பெய்து மூடிவைத்து நுரையடங்கின பின்பு திறந்துபார்த்தால், அத்தைலம் பார்த்தவர்களுடைய முகச்சாயைத் தனக்குள்ளே காட்டும். அஃதுச்சியில் வாக்கப்படுமானாற் பரவியோடி மண்டையிற்பற்றிப் பரபரென ஊறும் பிண்ணாக்கு முண்டாயிருக்கும் ஆதலாலும் இவ்விரண்டும் ஒன்றினையொன்று ஒக்குமென்று சொல்லுகவென்பதாம். [இதில்திலமும் அதன்தைலமும் ஒற்றுமை பற்றி அபேதமாகச் சொல்லப்பட்டன.]

ஒருவர், பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும் உவமைகற்பித்துப் பாடவேண்டுமென்ன, சிலேஷித்துப் பாடிய செய்யுள்.

"பெரியவிடமேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையிற்
பாம்பு மெலுமிச்சம் பழம்."

இ-ள். தேன்சொரிகின்ற சோலைசூழ்ந்த திருமலைராயனுடைய வெற்பகத்தில், பாம்பு மிக்கவிஷம் பொருந்தியிருக்கும், பரமசிவனுடைய திருமுடிமேலேறிக் குடைகவித்தாற்போலப் படம்விரித்திருக்கும் காற்றை உட்கொள்ளும். அதனால் உடலுப்பும். மேலெழுந்தாடாநிற்கும். கோபித்துச் சீறுங்குணமுடையதாம் ஆதலாலும், எலுமிச்சப்பழம் ராஜசமுக முதலாகிய பெரிய இடங்களில் உபசாரார்த்தமாகப் போய்ச்சேரும். பித்தம் கொண்டவர்களுக்கு அப்பித்தம் இறங்க அவர்கள் தலையிற் சாறுபிழிந்து ஏற்றப்படும்; ஊறுகாய்க்காகக் கருவியால் அரியப்படும். மேலே உப்பிட்டுக்குலுக்கப்படும் இரணத்தில் அதன் சாரம்பட்டால் எரிக்கின்ற குணமுடையதாம் ஆதலாலும் இவ்விரண்டும் தமக்குள் ஒன்றேடொன்று ஒப்பாகுமென்பதாம்.

ஒருவர், மலைக்கும் சந்திரனுக்கும் உபமானமாகச் சிலேஷித்துப் பாடவேண்டுமெனப்பாடிய செய்யுள்.

"நிலவாய் விளங்குதலா னீள்வான் படிந்து
சிலபோ துலாவுவதாற் சென்று—தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்குநிக ராக வழுத்து"

இ-ள். மலை பூமியின்கண் விளங்குதலாலும், மேகங்கள் சிலகாலம் தன்னிடத்தில் வந்துபடிந்து உலாவப்பெறுதலாலும், சிகரங்கள் மேலேதோன்றி வருதலாலும், சந்திரன் நிலவினையுடைத்தாய்ப் பிரகாசிப்பதனாலும், நீண்டவானத்தின்கண் படிந்து சிலபொழுது உலாவுதலாலும், அஸ்தமித்து மறுபடி தலைமேல் உதித்து வருதலாலும் ஒன்றையொன்றொத்ததாகச் சொல்வாயென்பதாம்.

ஒருவர், தேங்காய்க்கும் நாய்க்கும் சமத்துவம் கற்பித்துச் சிலேஷித்துப் பாடவேண்டுமெனப் பாடியசெய்யுள்:

"ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது—சேடியே
தீங்காய தில்லாத திருமலைரா யன்வரையில்
தேங்காயு நாயுந் தெரி,,

இ-ள். தீமையாயினவை ஒன்றுமில்லாத திருமலைராயனுடைய வெற்பகத்திலே. தேங்காயானது நாரேயன்றி ஓடுமுடைத்தாயிருக்கும்; உடைத்துப்பார்த்தால் அதனுட்புறம் வெளுத்திருக்கும். ஒருகுலைக்குப் பத்துப்பதினைந்துக்கு மேற்பட்டிருக்குமன்றி அது தாங்குமோ தாங்காதோவென்று அஞ்சிக் குறைந்திராது. ஆதலாலும், நாய் சிலநேரம் இங்கும் அங்கும் ஓடித்திரியும். சிலநேரம் இருந்தவிடத்திலேயே இருக்கும். அதனுள்வாயோ வெளுத்திருக்கும். ஆரேனும்புதியவர் வரக்கண்டால் அவரை உற்றுப்பார்க்கும். பார்த்துப் பின்பு குலைக்க ஆரம்பிக்கும். அப்படிக் குலைப்பதில் வெட்கப்படமாட்டாது ஆதலாலும் இவ்விரண்டும் ஒக்குமென்று அறிவாயாக வென்பதாம் [சேடி-மகடூஉமுன்னிலை.]

ஒருவர் மீனுக்கும் பேனுக்கும் உவமையாகச் சிலேஷித்துப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"மன்னீரி லேபிறக்கு மாற்றலையி லேமேயும்
பின்னீச்சிற் குத்தும் பெருமையால்—சொன்னேன்கேள்
தேனுந் துசோலைத் திருமலைரா யன்வரையின்
மீனும்பே னுஞ்சரியா மே."

இ-ள். மீன் பெருமைதங்கிய நீரினிடத்தில் உற்பத்தியாகும். உற்ப

த்தியானபின்பு மாறிவருதலையுடைய திரையிலேமேய்ந்து கொண்டிருக்கும். அப்படி மேயுமிடத்தில் ஏதாவது அரவங்கண்டாற் கண்டவுடன்பின்புறத்தில் குத்துவதுபோல நீந்திக்கொண்டே போகும் பெருமை யுடையதாம். ஆதலாலும், பேன் ஈரிலிருந்து மிகுதியாகப் பிறக்கும். உரம்பெற்ற தலையினிடத்தில் மேயும்; பின்பு பல்லைக் கடித்துக்கொண்டு பெண்களால் ஈச்சென்று குத்தப்படும். ஆதலாலும் இவ்விரண்டும் தம்முளொத்தன வென்பதாம். [ஈச்சென்பது-ஒலிக்குறிப்பு.]

ஒருவர், ஆட்டக்குதிரைக்கும் காவிரியாற்றுக்கும் ஒப்புமைகற்பித்துச் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

“ஓடுஞ் சுழிசுத்த முண்டாகுந் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும்—நாடறியத்
தேடு புகழாளன் றிருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா றும்”

இ- ள். தேசமெல்லாம் அறியத் தேடிய புகழினையுடைய திருருமலைராயானது வெற்பகத்தில் ஆட்டக் குதிரைவிசைகொண்டு ஓடாநிற்கும். சுத்தமான சுழியுள்ளதாயிருக்கும். விரோதிகளை முனைமுறியவடிக்கும். காண்பவருக்கு விருப்பமுண்டாகத் தலைவளைத்து நடக்கும் ஆதலாலும், காவிரியாறு நீர்பெருகியோடும். ஓடும்பொழுது அந்நீர்சுழித்தலை யுடைத்தாயிருக்கும். தன்னிலே தோய்ந்தவர்களைப் பாவனமாக்கும் பரிசுத்தமுள்ளதாம். நெருங்கியமலர்களை அலைத்துச்சாடும். விரைவுவாய்ந்ததாய் அலைகளை மடக்கியெறியும், ஆதலாலும் இவ்விரண்டும் தம்மில் ஒப்பாமென்பதாம்.

ஒருவர், கீரைப்பாத்திக்கும் ஏறுகுதிரைக்கும் ஒப்பமைத்துச் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியசெய்யுள்:

“கட்டி யடிக்கையாற் கான்மாறிப் பாய்கையால்
வெட்டிமறிக்கின்ற மேன்மையால்—முட்டப்போய்
மாறத் திருப்புகையால் வண்கீரைப் பாத்தியுந்தான்
ஏறப் பரியாகுமே,,

இ-ள். கீரைப்பாத்தி நிலங்கொத்திக் கட்டிகளை மண்வெட்டியால் அடித்துடைத்தலாலும், ஒருவாய்க்காலிலிருந்து மறுவாய்க்காலினல் நீர்மாறிப் பாய்தலாலும், சதுரம்சதுரமாகவெட்டித் தடுத்தலாலும், நேர்போய்க்கடைமடையில் முட்ட, அதுகண்டு, அங்கிருந்து பக்கமடையில் திருப்பிமாறத் திரும்புதலாலும், ஏறுகுதிரை

கட்டிக் கொட்படிக்கப் படுதலாலும், கால் மாறிமாறி எழும்பிப் பாய்தலாலும், தடுத்துத்திருப்ப வேண்டுமிடத்துக் கடிவாளத்தை யிழுத்துத்திருப்பலாலும் போகவேண்டிய இடமுழுதும் போய் மீளத்திரும்புதலாலும் இவ்விரண்டும் ஒன்றனை யொன்று ஒப்பாமென்பதாம். [கொட்படித்தல்-குதிரையைத்திருப்பும்பொழுதஃதுடனே திரும்பப் பழக்குதற்குக் கழுத்திற் கயிறுகட்டிச் சாட்டைகொண்டு சுற்றிச் சுற்றி அடித்தல்.]

ஒருவர், ஆட்டுக்கும் குதிரைக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியசெய்யுள்:

“கொம்பிலையே தீன்றின்னும் கொண்டவன்மேல் வெட்டுதலால்
அம்புவியி னன்னடைய தாதலால்—உம்பர்களும்
தேடுநற் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆடுங் குதிரையு நேராம்.”

இ-ள். தேவர்களும் தேடிவருகின்ற ரம்மியமான சோலைசூழ்ந்த திருமலைராயன்வெற்பகத்தில்ஆடு கொம்பினையுடைமையாலும் தழைகளை இரையாகத்தின்னுதலாலும், தன்னைவளர்ப்பவன்மேல் எழுந்து பாய்ந்து கொம்பினல் வெட்டுதலாலும், பூமியிலே தீங்கில்லாதஒழுக்கத்தினையுடையதாதாலலும், குதிரை கொம்பில்லாதிருப்பதனலும், புல்மாத்திரமன்று கொள்ளுமுதலியதீனுந் தின்னுதலாலும், போர்செய்யும் வீரன் அதன்மேலேறியிருந்து பகைஞரை வெட்டுதலாலும், சரகதி, மயூரகதி யாகிய நல்லநடை யினையுடையதாதலாலும், இவ்விரண்டும் ஒன்றனையொன்றொக்கு மென்பதாம்.

ஒருவர் துப்பாக்கிக்கும் ஓலைச்சுருளுக்கும் சமத்துவம் கற்பித்துப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

“ஆணி வரையுறலா லானகுறிப் பேதரலால்
பேணிக் கருமருந்து பெய்திடலால்—நீணிலத்தில்
செப்பார்க் குதவாத் திருமலைரா யன்வரையில்
துப்பாய்க்கி யோலைச் சுருள்.”

இ-ள். நெடிய பூமியில் தன்பேரைச்சொல்லி ஸ்துதிசெய்யாதபகைஞருக்கு உதவிசெய்யாத திருமலைராயனுடைய வெற்பகத்தில் துப்பாக்கி தன்னிடத்தில் ஆணியும் வரைகளும் பொருந்தியிருப்பதனாலும்சுடுவோன்குறித்தகுறி தவருததனலும்பாதுகாத்துக்கருமருந்திடப்படுதலாலும், ஓலைச்சுருள்எழுத்தாணிகொண்டுஎழுதப்படுதலாலும், தன்கண்ணெழுதிய விஷயக்குறிப்பைப் பிறருக்குத்தெரிவித்தலாலும், மைபூசப்படுதலாலும் இவ்விரண்டும் சமானமாகுமென்

பதாம். (இது பிற்காலத்தார் பாடிய செய்யுள் போலும்)

ஒருவர், வானவில்லுக்கும், விஷ்ணுவுக்கும், வெற்றிலைக்கும், முப்பொருட் சிலேடையாக ஒரு வெண்பாப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"நீரி லுளதா னிறம்பச்சை யாற்றிருவால்
பாரிற் பகைதீர்க்கும் பான்மையால்—சாருமனுப்
பல்வினையை மாற்றுதலாற் பாரீர் பெருவான
வில்விண்டு நேர்வெற் றிலை."

இ-ள். வானவில் நீர்கொண்டமேகத்தில் தோன்றியிருப்பதனாலும், பச்சைநிறம் உண்டாதலாலும், அழகுடைத்தாதலாலும், மழைக்குறிகளிலொன்றுய்ப் பூமியிற் கோடையென்னும் பகையைத் தீர்ப்பதனாலும், மனிதர்களுடைய பலவகைப்பட்ட தொழில்களையும் மாற்றுதலினாலும், விஷ்ணு மகாபிரளயத்தின்மத்தியில் தங்குவதனாலும், சாமளவர்ணமா யிருப்பதனாலும், இலக்குமியை யுடையதனாலும், உலகத்தில்தேவர்கள்முனிவர்களுடைய பகையையொழிக்கும்பான்மையினாலும், தன்னை ஆசிரயித்தமநுக்களின் சஞ்சித, ஆகாமிய பிராரப்த கருமங்களை நிவர்த்திப்பதனாலும், வெற்றிலை நீர்க்கால்களி லிருப்பதனாலும், பச்சென்றநிறமுடையதனாலும் மங்களகர மாதலாலும், ஒருவரையொருவர் பகைத்திருந்தால் அப்பகையை நிவர்த்திக்கின்ற தன்மையினாலும், மக்களது தந்தரோகத்தைத் தீர்ப்பதனாலும், இம்மூன்றும் ஒப்புமையுடையன வென்பதாம்.

ஒருவர், பூசினிக்காய்க்கும், ஈசனுக்கும் ஒப்பமைத்துப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"அடிநந்தி சேர்தலா லாக வெளுத்துக்
கொடியு மொருபக்கங் கொட்டு—வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனால்
பூசினிக்கா யீசனெனப் போற்று."

இ-ள். பூசினிக்காய் அடியிற் காம்பு சேர்ந்திருப்பதனாலும், உடல் வெளுத்து ஒருபக்கத்திற் கொடியையுங் கொண்டு, அழகினையுடைய வெண்சுண்ணத்தைமேற்புறத்திற்பூண்டு, வளைவாகிய தழும்பு பெற்றிருப்பதனாலும், ஈசன் அடியில் ரிஷபம் சேர்ந்திருப்பதனாலும், விபூதி தூளனத்தால் திருமேனி விளர்த்து, பார்ப்பதியையும் ஒருபக்கத்தில் வைத்துக்கொண்டு, அழகுடைய சர்ப்பாபரணத்தைப்பூண்டு, உமையவளுடைய வளைத்தழும்பு பெற்றிருப்பதனாலும் ஒப்பென்று சொல்லுகவென்பதாம்.

ஒருவர் ஐந்து டகரம் வரக் கும்பேசர் விஷயமாகப் பாடவேண்டுமென, நிரனிறையணியாகப் பாடிய செய்யுள்:

"ஓகாமா வீதோ டுடுடுடு நேரொக்க
நாகார் குடந்தை நகர்க்கிறைவர்—வாகாய்
எடுப்பர் நடம்புரிவ ரேறுவ ரன்பர்க்குக்
கொடுப்ப ரணிவர் குழைக்கு."

இ-ள். இளமரங்கள் அடர்ந்த சோலைசூழ்ந்த திருக்குடந்தைக்கிறைவராகிய கும்பேசர், ஓ, கா, மா, வீ, தோ என்னும் இவ்வைந்தெழுத்துடனே, டு, டு, டு, டு, டு, என்னும் இவ்வைந்தெழுத்தும் தனித்தனிபொருந்த அவை ஓடு, காடு, மாடு, வீடு, தோடு என்றுதலால், அவற்றுள் முறையே ஒன்றை அழகாகக் கையில்எடுப்பர். ஒன்றில் நடனம் செய்வர். ஒன்றின்மேல் ஏறுவர். ஒன்றைத் தம் மன்பர்க்குக் கொடுப்பர். ஒன்றைச் செவியில் அணிவரென்பதாம். (தோடு-காதாபரணம்.)

ஒருவர் பச்சைவடம், பாகு, சேலை, சோமன் என்னும் இந்நான்கு வஸ்திரபேதமும் வரும்படி ஒரு வெண்பாப் பாடவேண்டுமென்னப் பாடிய செய்யுள்:

"மாயன் றுயின்றதுவு மாமலராள் சொல்லதுவும்
வயகுருந்திற் கொண் டேறியதும்—தூய
இடப்பாகன் சென்னியின்மே லேறியதும் பச்சை
வடம்பாகு சேலைசோ மன்."

இ-ள். நெடுமால் மகாப்பிரளயத்தில் திருக்கண் வளர்ந்தருளியதும் பச்சைவடம்; தாமரையாசனத்தையுடைய இலக்குமியின் சொல்லும் பாகு; கண்ணபிரான் கோபிகைகளை நாணச்செய்யும் பொருட்டுக் கவர்ந்துகொண்டுபோய்க் குருந்தமரத்திலேறி ஒளித்து வைத்திருந்ததும் சேலை; மலைமகளை இடப்பாகத்திலுடைய சிவபெருமானது திருமுடியில் ஏறியிருப்பதும் சோமன்; முறையே பச்சைவடம் பாகு சேலை சோமன் என்பதாம். (பச்சைவடம்- ஆலிலை; சோமன்-சந்திரன்.)

ஒருவர், பொன்னுவரையிலை காய்பூவென்று பாடவேண்டுமென்னப் பாடிய செய்யுள்:

"உடுத்ததுவு மேய்த்ததுவு மும்பர்கோன் றன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப்—படுத்ததுவும்

அந்நா ளெறிந்ததுவு மன்பி னிரந்ததுவும்
பொன்னு வரையிலைகாய் பூ."

இ-ள். ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் ஆடையாக உடுத்ததும் பொன்; கிருஷ்ணவதாரத்தில் மேய்த்ததுவும் ஆ: இந்திரன் கல்மழை பொழிவித்ததினிமித்தம் குடையாகஎடுத்ததும் வரை; சயனத்திற் கிணங்கப்படுத்திருந்தது இலை; கன்றுகொண் டெறிந்ததும் காய்; அன்பினால் பலிச்சக்கரவர்த்தி யினிடத்தில் இரந்ததும் பூ; முறையே பொன்னுவரையிலை காய் பூவென்பதாம். (வரை-மலை, பூ-பூமி.)

கச்சிக்காவல னென்னும் ஒருவர், செங்கழுநீர்க் கிழங்கென்று பாடவேண்டுமென்னப் பாடியசெய்யுள்:

"வாதமண ரேறியது மாயன் றுயின்றதுவும்
ஆதிதடுத் தாட்கொண்ட வவ்வுருவும்—சீதரனார்
தாள்கொண் டளந்ததுவுந் தண்கச்சிக் காவலா
கேள்செங் கழுநீர்க் கிழங்கு."

இ-ள். சாந்தகுணத்தை யுடைய கச்கிக்காவலனே கேட்கக் கடவாய்! சம்பந்தமூர்த்திகளுடனே வாதுசெய்த சமணர்களேறிய தும் செங்கழு; நாராயணன் பள்ளிகொண்டதும் நீர்; பரமசிவன் சுந்தரமூர்த்திகளைத் தடுத்தாட்கொள்ளும்பொருட்டு எடுத்த உருவும் கிழம்; விஷ்ணுவானவர் திருவடியால் அளந்ததுவும் கு; முறையேசெங்கழுநீர்க் கிழங்கென்பதாம். [கு-பூமி.]

ஒருவர், நா, நீ, நூ, நே என்று பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"அரையின் முடியி லணிமார்பி னெஞ்சில்
தெரிவை யிடத்தமர்ந்தான் சேவை—புரையறவே
மானார் விழியீர் மலரண வொற்றிருக்கும்
ஆனலாம் நாநீ நூநே."

இ-ள். ம், ல், ர், ண் என்னும் இந்நான்கும், நா, நீ, நூ நே என்னும் இந்நான்கோடும் எதிர்நிரனிறையாகப்பொருந்தி, நாண், நீர், நூல், நேம் எனவருமாயின், உமாதேவியிடப்பாகத்திலெழுந் தருளியசிவபிரானது, அரையிலும் முடியிலும், மார்பிலும், கழுத்திலும் முறையே சேர்க்கப்படுவனவாகும் என்பதாம். [நேம்-விஷம் மானார்விழியீர் என்பது மகடூஉ முன்னிலை.]

ஒருவர், கணபதிக்கும், முருகனுக்கும் சிவனுக்கும் சிலேடையா

க ஒருவெண்பாப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"சென்னிமுக மாறுளதாற் சேர்தருமுன் னாலுகையால்
இந்நிலத்திற் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானுங் கணபதியுஞ் செவ்வேளும்
எண்ணரனு நேராவ ரே."

இ-ள். விநாயகன் முகமாறுபட் டிருப்பதனாலும், முன்னே தொங்குகின்ற துதிக்கையினாலும், ஒரு கொம்பினை யுடைத்தாயிருப்பதனாலும், வெல்லத்தின்கண் ஆவிர்ப்பவித்தலினாலும், முருகன் ஆறுமுகத்துடனிருப்பதனாலும், நெருங்கிய பன்னிரண்டு கைகளினாலும், இந்தப்பூமியில் ஒப்பற்ற திருச்செங்கோட் டி விருப்பதனாலும், நிலைபெற்ற சரவணப்பொய்கையில் அவதரித்ததனாலும், சிவன் திருமுடியிற் கங்கையிருப்பதனாலும், முன்னே சேர்ந்திருக்கின்ற நான்கு கைகளினாலும், இவ்வுலகத்திற் கைலைமலையி லிருப்பதனாலும், நெற்றிக்கண்ணைப் பொருந்துதலாலும், இம்மூவருந் தம்முள் ஒருவரையொருவர் ஒப்பாவாரென்பதாம். (சென்னி முகமென்பது இருபெயரொட்டு.)

ஒருவர், தை மாசி பங்குனி மாதம் என்று பாடவேண்டுமென்னப் பாடிய செய்யுள்:

"பாணற்குச் சொல்லுவதும் பைம்புனலை மூடுவதும்
தாணு வுரித்ததுவுஞ் சக்கரத்தோன்—ஊணதுவும்
எம்மானை யெய்துவது மீசனிடத் துஞ்சிரத்தும்
தைமாசி பங்குனிமா தம்."

இ-ள். தையற்காரனுக்குச் செய்யென்று சொல்வதும் தை; சலத்தை மறைத்துக்கொண்டிருப்பதும் மாசு; சிவன் அடர்த்துரித்ததும் இபம்; விஷ்ணுவுக்கு உணவாயிருப்பதும் கு; எங்கள் பெண்ணைச் சேர்வதும் நீ; பரமசிவன் இடப்பாகத்தில் வைத்ததும் மாது; முடியில் தரித்ததும் அம்; முறையே தை மாசி பங்குனி மாதமென்பதாம். (இபம்-யானை, அம்-கங்கை, நீ என்பது-நி எனக் குறுக்கலாயிற்று.)

ஒருவர், ஒருபாடல் செருப்பென்றெடுத்து விளக்குமாறென்று முடிக்கவேண்டுமெனப் பாடியசெய்யுள்:

"செருப்புக்கு வீரர்களைச் சென்றுழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல—மருப்புக்குத்

தண்டேன் பொழிதிருத் தாமரைமேல் விற்றிருக்கும்
வண்டே விளக்குமா றே."

இ-ள். யுத்தகளத்திற் போய்ப்புகுந்து வீரர்கூட்டத்தைக் கலக்கிச் சிதறவடிக்கின்ற வேலாயுதத்தை யேந்திய குறிஞ்சித்தலைவனுகிய முருகக்கடவுளை யான் ஆலிங்கனஞ்செய்ய, வாசனைபொருந்திக் குளிர்ச்சி தங்கிய தேனைச்சொரிகின்ற அழகிய தாமரைமலரின் மேல் வீற்றிருக்கின்ற வண்டுதான், வழிகாட்ட நிற்குமென்பதாம். இக்கருத்து ஒருபெண் முருகவேளைத் தழுவக்கருதி வண்டைத் தூதுவிடக் குறித்ததாக அமைக்கப்பட்டது.

ஒருவர், பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் சமானம்தோன்றப் பாடவேண்டுமென்னப் பாடியசெய்யுள்:

"நஞ்சிருக்குந் தோலிருக்கு நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாதே—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்."

இ-ள். மிகுதியாகிய பூந்தேன்பாய்கின்ற சோலைசூழ்ந்த திருமலைராயனுடைய வெற்பகத்தில், பாம்பு விஷமுடைத்தாயிருக்கும். காயசித்திபெற்றோர் சட்டை கழற்றுவதுபோலப் பருவமறிந்து தோலுரிக்கும். கடவுள் முடியின்மேலிருக்கும். கொடிய கோபத்தினாலே அதன் பற்பட்டால் இறந்தவுயிர் திரும்பமாட்டாது ஆதலானும், வாழைப்பழம் நைந்திருக்கும். தோலுரிக்கப்படும். கடவுள் திருமுடிமேல் ,பஞ்சாமிர்தத்தோடு கூட்டி அபிஷேகிக்கப்படும். கறியாகவாவது மற்றெவ்வகையாகவாவது புசிப்பவர்களுடைய பல்லினிடத்திற் பட்டாற் பின்பு திரும்பமாட்டாது ஆதலானும் இவ்விரண்டும் ஒப்பென்பதாம்.

ஒருவர், கண்ணுடிக்கும் அரசனுக்கும் ஒப்பமைத்துப் பாடவேண்டுமென்னப் பாடிய செய்யுள்:

"யாவருக்கும் ரஞ்சனைசெய் தியாவருக்கு மவ்வவராய்ப்
பாவனையாய்த் தீதகலப் பார்த்தலால்—மேவும்
எதிரியைத்தன் னுள்ளாக்கி யேற்ற ரசத்தால்
சதிருறலா லாடியர சாம்."

இ-ள். கண்ணுடி எல்லார்க்கும் விருப்பத்தையுண்டாக்கி, எல்லார்க்கும் அவரவரைப்போலப் பாவனையாய் முகத்தழுக்கு நீங்கத் திருத்தமாகப் பார்க்கப் படுதலானும், எதிர்ப்பட்டவனது சாயையைத் தனக்குள்ளேகொள்ளத்தக்கதாக ரசம் பூசப்பட்டுச் சதிர்பெற் றிருப்பதனுலும், அரசன் தன் கோல்கீழ் வாழ்வார் யாவருக்கும் சந்தோஷமாகிய செய்கையைச் செய்து யாவருக்கும் அவரவர் நிலைமைக்கேற்கத் தன்னைப்பாவித்துத் தீமையகலப்பார்ப்பதனுலும், தன்மேற் போருக்கு வருகின்ற பகைஞனைச் சாமோபாயத்தால் தன் வசப்படுத்திச் சிங்கார முதலிய நவரசத்தைக்கொண்டு மகிமை பெற்றிருப்பதனுலும் ஒப்பாமென்பதாம்.

ஒருவர், சிவனைக்குறித்து நீறுவாய் நெருப் பாவாய் கூறுவாய் கொழுந்தாவாய் நட்டமாவாய் நஞ்சாவாய் என்று ஒரு வெண்பாப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"நீறுவாய் நெற்றி நெருப்பாவா யங்கமிரு
கூறுவாய் மேனி கொழுந்தாவாய்—மாறுத
நட்டமா வாய்சோறு நஞ்சாவாய் நாயேனை
யிட்டமாய்க் காப்பா யினி."

இ-ள். நெற்றியின்கண் திருநீறுடைத்தா யிருப்பாய். அங்கம் அக்கினிமயமா யிருப்பாய். திருமேனி இரண்டு கூறுய்யிருப்பாய். அக்கினிச்சுவாலையாயிருப்பாய். நஞ்சை உணவாகக் கொள்ளுவாய். உனது குணுதிசயம் பகிர்முகத்தில் இப்படியிருப்பினும் அந்தர்முகத்திலுள்ள கிருபையினுல் நாய்போன்ற அடியேனை இஷ்டமாக ரட்சித்தல்வேண்டும் என்பதாம்.

ஒருவர், அடிப்பது மத்தாலேயழ என்பதை ஈற்றடியாகக் கொண்டு அயலடியும் அதுபோலத் திரித்து ஒரு வெண்பாப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாறியென்றும்
கண்ண னிவனென்றுங் கருதாமல்—மண்ணை
அடிப்பது மத்தாலே யளந்தானை யாய்ச்சி
அடிப்பதுமத் தாலே யழ."

இ-ள். உலகம்முழுதும் திருவடித்தாமரையினு லளந்த பரமவிராட்டுவை இவன் கார்போலுங் கரியநிறத்தை யுடையவனென்றும், சகலவேதங்களும் பரிமளிக்கின்ற திருவாயினையுடையவனென்றும், யாவர் கண்ணினிடத்திலு மிருப்பவனென்றும் நினையாமல் அசோதைப்பிராட்டியானவள் அவனை அழஅழஅடிப்பது மத்தினுலேயாம்.

ஒருவர், திருமலைராயனுடைய வாளைக் குறித்துப் பாடவேண்டுமெனப்பாடிய செய்யுள்:

"செற்றவரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாளி வாளாவா ளாம்."

என்பதாம். இது பொருள்விளங்கிக் கிடக்கின்றது.

ஒருவர், சிவனுக்கும், சுப்பிரமணியனுக்கும், விநாயகனுக்கும், விஷ்ணுவுக்கும், சிவனடியாருக்கும் தனித்தனி ஆறுதலையுண்டென்று ஒரு வெண்பாப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானவே—சங்கைப்
பிடித்தோற்கு மாறுதலை பித்தனார் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார்."

இ-ள். பரமசிவனுக்குத் திருமுடியிற் கங்கையும், சுப்பிரமணியருக்கு ஆறுசிரசும், விநாயகருக்கு மாறுசிரசும், விஷ்ணுவுக்குத் தலையிலே பாற்சமுத்திரமும், சிவனுடைய திருவடியைத் துதிசெய்பவர்களுக்கு மனவருத்தந் தணிதலுமுண்டென்று நீ காண்பாயாக என்பதாம். ஆறுசமுத்திரத்திற்கு இனம்பற்றிய பெயர்

ஒருவர், சிவனை முக்கண்ணனென்பதற்கு வேறு காரணந் தோன்ற ஒரு வெண்பாப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்:

"முக்கண்ணா னென்றரனை முன்னோர்மொழிந்திடு வார்
அக்கண்ணற் குள்ள தரைக் கண்ணே—தொக்க
உமையாள்கண் ணொன்றரை மற்றான் வேடன் கண்ணொன்
றமையுமித னாலென் றறி."

இ-ள். சான்றோர் சிவபிரானை மூன்றுகண்ணுடையோனென்று பிரசித்தமாகச் சொல்வார்கள். அப்படிச்சொல்வது யாதினாலெனில், அச்சிவனுக்கு இயற்கையாயுள்ளது அரைக்கண்மாத்திரமே. அதனோடு வாமபாகத்தில் அர்த்தநாரியாய் எழுந்தருளிய உமாதேவியின் கண்ணொன்றரையும் அக்காலத்தில் ஊன்படைத்த கண்ணப்பநாயனாரென்னும் வேடன் தன்முகத்தில் நின்றும் களைந்து சாத்தியகண்ணொன்றும் சேர்ந்து மூன்றாயிருக்கின்ற இவ்வித காரணத்தினாலேதா னென்று அறிகவென்பதாம்.

ஒருவர், கஞ்சிகுடியென்று சிலேஷையாக ஏகாம்பரநாதர்மேல் ஒரு வெண்பாப் பாடவேண்டுமென அதற்குமேலும் விசேஷமாகப் பாடுவோமென்று பாடிய செய்யுள்:

"நேற்றிரா வந்தொரு வணித்திரையிற் கைப்பிடித்தான்
வேற்றாரா னென்று விடாயென்றேன்—ஆற்றியே
கஞ்சி குடியென்றான் களித்தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்றான் மறைந்து."

இ-ள். கொடிபோலும் இடையிணையுடைய சேடிகளே! நேற்றி ராத்திரி நித்திரைசெய்யும் சமயத்தில் ஒருவன் வந்து என் கையைப் பிடித்தான். நான் அவன் ஆரோ அயலூரானென்று ஐயமுற்றுப் பிடித்தகையை விடென்பதற்கு விடாயென்றேன். அவன் என்னைத் தணியச்செய்து அதற்கு உத்தரமாக நீ விடாய்கொண்டிருப்பதனால் அதுதணியக் கஞ்சிகுடியென்பது போலக் கஞ்சிகுடி யென்றான். என்றவுடன் காஞ்சிப்பதியில் வசிக்கும் ஏகாம்பரநாதனென்று நான் தெளிந்து இப்பொழுது என்னைச்சேர்ந்து சுகித்துப்போவென்பது குறிப்பாகத்தோன்றும்படி களித்தின்றுபோகவென்றன். அதுகேட்டு அவன் தான் கஞ்சிகுடியென்றதற்குப் பரிகாசமாகத் தன்னை நான் களித்தின்றுபோ வென்றுசொன்னே னென்றோ, அல்லது மற்றுயாதுகாரணத்தினாலோ உடனே மாயமாய் மறைந்துபோய்விட்டான். இதென்ன ஆச்சரியம் என்பதாம்.

மேலும், ஒருவர் கத்திக்கும் பாலுக்கும் சிலெஷித்துப் பாடவேண்டுமென, இந்தக்கேள்விக்கும் ஒரு பாடல் பாடவேண்டுமாவென்று வாய்மொழியாகச்சொன்ன உத்தரம் "காய்த்துத்தோய்த்துக்கடை" இ-ள். கத்தியை உலையிற் காய்ச்சித் தோயல் செய்து கடைச்சற்றுயென்றும், பாலை அடுப்பிற்காய்ச்சிப் பிரை குத்தித் தோய்த்து மத்தினாற்கடை யென்றுமாமென்பதாம்.

ஒருவர், சிட்டுக்குருவிக்கும் சிவனுக்கும் சிலேஷித்துப்பாடவேண்டுமென, இதற்கும் ஒரு பாடலாவென்று வாய்மொழியாகச் சொன்ன உத்தரம் "பிறப்பிறப்பிலே" இ-ள். சிட்டுக்குருவிக்கும் பிறப்பு இறப்பிலே என்றும், சிவனுக்குப் பிறப்பு இறப்பு இல்லையென்றும் ஆம்மென்பதாம்.

இன்னும் அவர்களில் மற்றவர்கள் கொடுத்த சமிசைகளும், காளமேகப்புலவர் பாடிய பாடல்களும் பலவுண்டு. அவைகள் இட

கர்களாயும் வசைமுதலியவைகளாயும் இருப்பதுபற்றி அச்சிடாதுவிடப்பட்டன.

இவ்வாறு காளமேகப்புலவர், அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் யமகண்டத்தின் உறிமேலிருந்தபடி அகிலாண்டநாயகி அனுக்கிரகத்தாற் பெரும்பாலும் பாடல்களாகவும் சிறுபான்மை வாய்மொழியாகவும் உத்தரம் சொன்னதேயன்றிச் சிறிதாவது தவறியதென்று நினைக்கவும், அதுபற்றி அவர்கள் உபத்திரவப்படுத்த எத்தனிக்கவும் இடங்கொடாமற் சாதித்ததுப் பின்பு உறியைவிட்டிறங்கினர். அவ்வதிசயத்தைப் பிரத்தியட்சமாகக் கண்டும், திருமலைராயனாவது, அதிமதுரகவியாவது, அறுபத்துநாலு தண்டிகைப்புலவர்களாவது இவர் சாரதா விக்கிரகமாக அவதரித்த மகாத்துமாவென்று நினையாமலும், சம்மானம் பண்ணுமலும் பொறுமையைமேற்கொண்டு அவரை உபேட்சித்ததனால், புலவர் சிரோமணியாகிய அவருக்கு மனமெரிந்து சகிக்கக்கூடாமல் மண்மாரி பொழிந்து திருமலைராயன் பட்டணம் அழியும்படி வசைபாடினர்: அப்பாடலாவது,

"செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யாவரனே யரைநொடியில்—வெய்யதழற்
கண்மாரி யான்மதனைக் கட்டழித்தாற் போலிவரை
மண்மாரி யாலழிய வாட்டு."

என்பதாம்.

வசைபாடின புலவர்பெருமானவர் "மதியாதார்வாசலை மிதியாதிருப்பதுகோடி" என்பதை நினைத்து, இனித் திருமலைராயன் பட்டணத்தைத் திரும்பியும் பார்க்கலாகாதென்ன வைராக்கியத்தினால், முத்துவாங்கிவரும்படி மோகனாங்கி செ னசொல்லையும் பொருள்செய்யாமல், அந்தக்ஷணமே அவ்விடத்தில்நின்று நீங்கி முன்போலவே ஸ்தலயாத்திரை பண்ணிக்கொண்டுபோய்த் திருவாரூரிற் சிலநாள் வசித்திருக்கையில், ஒருநாள் தியாகரைத் தரிசிக்கும்படி கோயிலுக்குப்போன வேறொருவித்வான் சுவாமிமேல் சிலேஷையாக ஒருபாடல் பாடவேண்டுமென்று நினைத்து "நாணென்று நஞ்சிருக்கு நற்சாபங்கற்சாபம்" என முதலடிமாத்திரம் தொடங்கி, அப்புறம் அமைக்க அவருக்குக் கருத்துத்தோன்றாமையால் அதை அந்தக்கோயில் மதிற்புறத்தில் எழுதிப்போய் மறுநாள்வந்து பார்க்குமளவில், அதன்கீழ்,

"பாணந்தான் மண்டின்ற பாணமே—தாணுவே
சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ
நேரார் புரமெரித்த நேர்."

என்று மற்றமூன்றடியும் முடித்தெழுதி யிருக்கக்கண்டு விசாரித்து, காளமேகப்புலவரால் அது முற்றுப்பெற்றதென்று கேள்விப்பட்டு, அவர் கவிபாடும் திறத்தைக்குறித்து அவ்வித்வான் அதிசயித்து அதிக சந்தோஷப்பட்டார். இப்பாடலின் பொருள்: அக்கினிஸ்தம்பமாய் விளங்கியிருப்பவனே சிறப்புப்பொருந்திய திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! திரிபுரதகனம் செய்த காலத்தில் உன் கையிலேந்திய வில் நாணை நைந்திருந்தது. அவ்வில்லோ வளைக்கப்படாத கல்லாயிருந்தது. அம்போ மண்தின்னப்பட்டிருந்தது. இப்படி உனக்குக்கிடைத்த யுத்தாயுதமெல்லாம் ஒன்றுக்கும் உதவாமற் கேவலம் அவலமானவைகளாயிருக்க, சத்துருக்களுடைய நகரத்தை நீ எரித்தாயென்பது எப்படியோ? யோசிக்குமிடத்திற் சிரிப்பாயிருக்கின்றதென்பதாம். (நாண் நஞ்சிருக்கு மென்றது-விஷம்பொருந்திய பாம்பென்றும், கற்சாபம்-மேரு வில்லென்றும், மண்தின்றபாணம்-பூமியையுண்ட விஷ்ணுவென்றுமாம்.)

அதன்பின்பு வெகுநாள் கழித்துக் காளமேகப்புலவர் பிராணவியோகமாய் அவர் சரீரம் மசானத்திற் காஷ்டத்தின்மேல் வைக்கப்பட்டு ரிந்துகொண்டிருக்கையில், மேற்படி வித்வான் அச்செய்திகேட் அம்மயானத்திற்சென்று பிரேதாக்கினி கொழுந்துவிட்டெழு ஆகாயமளாவி எரிவதுகண்டு மனங்கலங்கி,

"ஆசுகவி யகில வுலகமெல்லாம்
வீசு கவிகாள மேகமே—பூசுரா
விண்கொண்ட செந்தழலாய் வேகின்றதையையோ
மண்டின்ற பாணமென்ற வாய்."

என ஒரு வெண்பாப்பாடி வியசனப்பட்டார். இந்தப்பாடலும், "நாணென்று நஞ்சிருக்கு நற்சாபங் கற்சாப"மென்றதும் இரட்டைப்புலவர்களாற் பாடப்பட்டனவென்று சிலர் சொல்வார்கள். அப்படிச் சொல்வது யுக்திக்கும் அனுபவத்திற்கும் விரோதமாயிருக்கின்றது.

திருமலைராயன் பட்டினத்துக்கு முதன்முறை யிவரெழுந்தருளிக் கடைவீதியில், ஒருகடையில் வீற்றிருக்கையில், மிக்க ஆடம்பரத்துடன் இவ்வீதிவழியே சென்ற அச்சமஸ்தானத்து வித்துவானைக்கண்டு, வழக்கப்படி அங்குள்ளார் யாவருமெழுந்து, கைகுவித்து அவர்க்கு மரியாதை செய்தனர். அதனைக்கண்ட புலவர்பெருமான் புன்முறுவல்செய் தெழுந்திடா திருமாந்திருந்தனர். அதனைக் கண்டுணர்ந்த அதிமதுரகவி யென்பவர், இவரையொரு செருக்குற்ற புலவராக எண்ணி, இவர் திறமையை அளந்தறியுமாறு ஒருவனிடத்திற் சிறிது பொருள்கொடுத்து, இவர்வீற்றிருந்த கடைக்காரனிடத்தில், "மேகமும், பசுவும் ரத்நமும்," அப்பொருளுக்கு வாங்கிவரும்படி யேவியனுப்பினார். அவ்வேவலாளன், அக் கடைக்காரனிடத்து வந்து அப்பொருளைக்கொடுத்து மேற்சொல்லிய மூன்றையுங்கேட்க, கடைக்காரன் மனமருண்டு சமஸ்தான வித்துவான் விரும்பியதை மறுக்கமாட்டாமையாலும், பசுவும், ரத்நமும் கிடைப்பினும் மேகங் கிடைக்கமாட்டாமையாலும் வருந்தி நிற்கையில், அக்கடையிலிருந்த காளமேகப்புலவர், அக் கடைக்காரனை நோக்கி, ஓய் வணிகரே! வருந்தாதீர்! இவன் கொடுத்த பொருளுக்குத் தக்கபடி, உம்மிடத்துள்ள 'காராமணிப்பயறு கொடுத்தனுப்பும்' என்றார். அவ்வியாபாரி அதற்குடன்படாமல் மிகவுமஞ்ச, அவனைத்தேற்றி, கார்=மேகம்; ஆ=பசு; மணி=ரத்நம்; இம்மூன்றுங் கூடியது 'காராமணி' என்று அக் கடைக்காரனுக்கு விளக்கிக்காட்டி, அக்காராமணியை கொடுத்தனுப்பச் செய்தார். அதிமதுரகவிராயர் கருதியது அதுவேயாதலால், அந்தப்புலவர் இப்பெருமானுடைய அபாரசக்தியை அறிந்து பொறுமைகொண்டு போயினர்.

காளமேகப்புலவர்சரித்திரம் முற்றிற்று.